



# ஞானச்சுடர்

புரட்டாதி

## மலர் 2005




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள் வழி

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர்**

**பொருள்—** "நாம் மேன்மேலும் உயர்வோம்" என்னும் உயர்வெண்ணம் கொண்டவர் தம் மதிப்புக் கெடுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யாது விட்டுவிடுதல் வேண்டும். (653)



# நற்சிந்தனை


## செல்வக் குருநாதா

வலைப்பட்ட மான்போல் மயக்கமிக வாகுதெடா
சிலைப்பட்ட பாண்டம்போற் சித்தஞ் சிதறுதெடா

எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டிடெடா
உனக்குள்ளே நானிருக்கு முண்மையிலே மாட்டிடெடா

பேசாத மந்திரத்தின் பெருமைநீ தந்திடெடா
ஆசா பிசாசை யகற்றவழி காட்டிடெடா

என்னோ டுடன்பிறந்தா ரெல்லோரும் மாண்டார்கள்
உன்னுறவே யல்லாம லோருறவு மில்லையெடா


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 93

## 2005 புரட்டாதி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விழிக்குத்துணை | இரா சிவ அன்பு | 1 - 3 |
| ஆலயத்திருப்பணிச் சபை | மு. மகேஸ்வரன் | 4 - 5 |
| தலப்பெருமைகளுடன்.... | கு. மாலினி (சித்தாந்த பண்டிதர்) | 6 -10 |
| ஓம் | இரா செல்வவடிவேல் | 11 - 14 |
| தண்டியடிகள் நாயனார் | க. சிவசங்கரநாதன் | 15 - 16 |
| ஒரு மணித்துளிநேரம்........ | முருகவே பரமநாதன் | 17 - 19 |
| சித்திரத்தேரில்...... | கந்தைக்கணபதி | 20 - 22 |
| சித்தர்களின் சமய தத்துவ...... | இ. சாந்தகுமார் | 23 - 25 |
| மேன்மைகொள் சைவநீதி | சி.சி. வரதராசா | -26 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய... | சி. வேலாயுதம் | 27 - 28 |
| விபீஷண கீதை | S.R. சரவணபவன் | 29 - 31 |
| மானுடத்தை மேன்மைப்... | வ. குமாரசாமிஐயர் | 32 - 35 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 36 - 39 |
| சந்நிதிச் சண்முகனும்....... | வை.க. சிற்றம்பலம் | 40 - 41 |
| ஆட்கொண்டபோது | சி. யோகேஸ்வரி | 42 - 43 |
| நித்திய அன்னப்பணி... | | 44 - 45 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 46 - 48 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

## ஞானச்சுடர்

# ஆவணிமாத வெளியீடு

மேற்படி சஞ்சிகையின் வெளியீடு 26-08-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வுற்றது.

வெளியீட்டுரை ஆற்றிய தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் ஆசிரியர் திரு கு. இரவீந்திரன் அவர்கள் ஞானச்சுடர்ச் சஞ்சிகையானது தொடர்ந்து எட்டாண்டுகளாகப் புதுப்புது மெருகுகளுடன் வெளிவந்துகொண்டிருப்பது போற்றுதற்குரியதென்றும் அதனிலும் மேலாகச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் கைங்கர்யப் பணிகள் வார்த்தைகளால் அளவிட்டுரைக்க முடியாதன என்றும் கூறினார்கள்.

மதிப்பீட்டுரை நிகழத்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (பணிப்பாளர், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ். பல்கலைக்கழகம்) தமது உரையினிடமாகச் சந்நிதியான் பசிப்பிணி மருத்துவனாக நின்று அருள்பாலித்துக் கொண்டிருப்பதோடு ஞானபண்டிதனாக நின்று மெய்ஞ்ஞான ஒளி பரப்பிக் கொண்டுள்ளார் என்று கூறினார்கள்.

தொடர்ந்து உரையாற்றுகையில், எமது சமய குரவர்களுக்கு முன், கி.பி 4ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த காரைக்காலம்மையார் அவர்களே பக்தி நெறியைத் தொடக்கியவர் ஆவாரென்றும் இளையான் குடிமாற நாயனார் மேற்கொண்டு ஒழுகிய மாகேசுர பூஜையின் தூய்மையை இன்றும் சந்நிதியான் ஆச்சிரமத்திற் கண்டு ஆனந்திக்கலாமென்றும் எமது சமயம் எம்மையெல்லாம் நேர்மையாக வாழவைத்துக்கொண்டுள்ளதென்றும் கூறினார்கள்.

ஆவணிமாத ஞானச்சுடரில் வெளிவந்த கட்டுரைகள் பற்றியும் இரத்தினச் சுருக்கமாகக் கூறிக்கொண்டு தமது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

தொழில்ரீதியான முக்கியத்துவத்தை உணர்ந்து சர்வதேசரீதியாக அதனைக்கொண்டாடுகின்ற சிறப்பு ஆசிரியத் தொழிலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம் மட்டுமல்ல அபிவிருத்தியடைந்த அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்ற பேதமின்றி உலகில் உள்ள அனைத்துச் சமுதாயங்களுக்கும் ஆசிரியத்தொழிலின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் உணரச்செய்கின்ற ஒரு விடயமுமாகும்.

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் சிறப்பான கல்வியைப்பெற்று அந்த சிறப்பான கல்விக்கு ஊடாகவே இவ்வுலகில் சிறப்பையும் மேன்மையையும் பெற்றுக் கொள்கின்றனர். அதுமட்டுமன்றி அவ்வாறான சிறப்பான கல்வியை பெற்றவர்கள் தான் இவ்வுலகை வழிப்படுத்திக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம். கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதே இன்றைய யதார்த்தமாகும். அவ்வாறான அந்தக் கல்வியை குழந்தைகளுக்கு ஊட்டி அவர்களை மேன்மையடையச் செய்வதில் ஆசிரியர்கள் இன்றும் மிகவும் பிரதான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் ஒவ்வொரு குழந்தையையும் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக உலக சமுதாயத்தையே உயர்த்துகின்ற பாரிய பங்களிப்பை வழங்கிக்கொண்டிருக்கும் ஆசிரிய சமுதாயத்தைக் கௌரவித்து அவர்களை ஊக்கப்படுத்துவது அவசியமாகின்றது.

ஆசிரியத்தொழிலை ஒரு வியாபாரமாகக் கருதிச்சிலர் செயற்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஆசிரியர்கள் மீது சுமத்தப்படுவது எமது காதுகளுக்கு கேட்காமல் இல்லை. ஆனாலும் ஆசிரியத் தொழிலைத் தொண்டாகவும், சமூகசேவையாகவும் கருதிச்செயற்படுகின்ற ஆசிரியர்கள் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்பதை நாம் கருத்தில் எடுப்பதே பொருத்தமானது. அதுமட்டுமன்றி அவர்கள் மீதுள்ள குறைகளை ஆராயாது அவர்களைக் கௌரவிக்கின்ற சமுதாயக்கடமையை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

பிரித்தானியா நாட்டில் 2ம் சாள்ஸ்மன்னன் ஒருமுறை பிரபல்யம் வாய்ந்த ஒரு பாடசாலை தொடர்பான விழாவிற்கு விஜயம் செய்தான். அப்பொழுது அந்த நாட்டின் மரபிற்கு இணங்க வழமைபோல அனைவரும் தமது தலைப்பாகையையும் தொப்பிகளையும் கழட்டி அந்த மன்னனுக்கு மரியாதை -செய்தார்கள். ஆனால் அந்தப் பாடசாலையின் தலமை ஆசிரியர் குஸ்ப்பி என்பவர் மட்டும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. இது அரசனை அவமதிப்பதற்காகச் செய்யப்படவில்லை எனவும் உலகில் எல்லோரையும் விட ஆசிரியரே உயர்ந்தவர் என தான் மாணவர்களுக்கு போதித்திருந்ததை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறு நடந்து கொண்டதாகவும் பின்பு அந்த தலமை ஆசிரியர் விளக்கம் அளித்திருந்தார்கள். இதனை அரசனும் ஏற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. ஆகவே இவ்வாறான ஒரு உயர்ந்த கௌரவம் ஆசிரியர்களுக்கு இருக்கின்றது என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து செயற்படுகின்ற அதேவேளை ஒக்டோபர் 5ம் திகதி இடம்பெறும் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாமும் ஆசிரியர்களை கௌரவித்து வாழ்த்துவோமாக.

உ

# கடலருகேமேவும் ஆறுடையஅப்பன்

சலத்திடைத் தவழ்ந்திளைத்து ழைக்கும் சார்புறு நெஞ்சங்கொள்மாந்தர்
புலத்துறு மீனும் பாடும் சுழிக்குமோர் அலைகள் நெஞ்சிற் சாடிச்சார
கலக்குமோர் கடற் காற்றுக்கஞ்சா நன்நெஞ்சங்கள் கூர்ந்து
துலக்கவே வேலன்நாமம் புகட்டியே மேலைக்கரை யறிந்திடுவார்!

கலங்கார் காட்டாற்று வலிதனக்குமடங்கார் கந்தனருளால்
அலங்கார ஞானநூற்பொரு ளைக்கரங்குவித் தோதுவார் மோனப்பொருளான
பாலானந்த ஆற்றினிடைமுருக நாமமேத்துவார் ஞானச்சுடரறிந்தவரே
காலானைக் கழல்பிடித்தேத்திக் கொண்டமாதவப்பெருங்கடல் மருண்டு
-மருண்டனரே!

வேலவனைவேண்டுவார் வேந்தர்வேந்தர் தமக்கஞ்சார் காலன்கணக்கிற்சேரார்
கண்டதுட்டநோயணுகார் கலங்குமிடர் நரகக் குழிபுகார்
கருவிழிபிதுங்கக் கடுக்கும் பாசாங்குச மிறுக்குமிடர்க் கஞ்சார்
வேதனை துவண்டுமாளப் போகவிப்பிறவிசோரத் திருக்கைவேலை வேண்டுவார்!

ஆனதுஅலங்கல்மேலாம் அவலக்கடல் நீக்கவேண்டித்தானது வாகவந்ததெய்வ
-மென்றாடுவார்
ஈசனுக்குவந்த யோக ஓமெனும் மந்திரத்தையோதியமெய்ஞ்ஞானச்
-சுடரெனப்பாடுவார்.
ஒண்கரிமுகன் தம்பியே மண்கமழுந்திகொள் திருமாலின்மருகோனே
ஏழுகடலெற்றி வளைத்திடும் தொண்டைமானாற்றிடைப் பள்ளிகொள்ளப்பனே!

மதிதனை யுலகோர்க்கெங்குமருள் கொடுத்தாண்டு கொண்டமெய்யனே
கதியொன்றும் காண்கிலேன் கவசமுற்றிடும்மாயை வாழ்வினைப்புரிகிலேன்
நதியெனப்படர்ந்தோடும் பொய்வாழ்வினைப் புசியெனப் புகன்றனைவடிவேலனே
நெறிகாண் விதியைமாற்றிப் பதிபுகழ்போற்றும் நின்பதமலர்தந்தாளுவாயென்
-ஆறுடையப்பனே!

**கலைமணி க. தெய்வேந்திரம் A.I.D.P சித்தாந்தவாரிதி அவர்கள்.**

# புரட்டாதிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி கௌரி யோகராஜா**
(லண்டன்)

**திருமதி மகேஸ்வரி செந்திமாணிக்கம்**
(மலேசியா)

**திருமதி நேசமணி இரத்தினசாமி**
(மலேசியா)

**திரு சி. சிவமூர்த்தி**
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திரு ப. சாயீசன்**
(சத்திய பவனம் ஏழாலை மேற்கு)

**திரு கதிரவேலு, பஞ்சாட்சரம் ஆசாரியார்**
(காளி கோவிலடி, மானிப்பாய் தெற்கு)

**திரு வே. செல்வராஜா**
(பரிசயப்புலம் குப்பிளான் தெற்கு)

**Dr. திருமதி பத்மராணி, குகானந்தன்**
(பல்வைத்திய நிபுணர் அச்சுவேலி)

**திரு கந்தையா ஜெயபாலகணேசன்**
(மின்சார சபை சிறுப்பிட்டி)

**திரு சு. கனககுந்தரம்**
(சிறுப்பிட்டி தெற்கு)

**திரு P. நித்தியானந்தம்**
(சிறுப்பிட்டி தெற்கு)

**திரு ந. முத்துக்குமாரசாமி**
(சிறுப்பிட்டி தெற்கு)

**உரிமையாளர்**
(அருளானந்தா பிடவை விற்பனை நிலையம், சங்கானை)

**உரிமையாளர்**
(சிந்து வர்த்தக நிலையம், உரும்பராய்)

**திரு வை. பரஞ்சோதி**
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)

**திரு A. நாகரெத்தினம்**
(கஜானன் அரைக்கும் ஆலை, இராச வீதி நீர்வேலி மேற்கு)
**திரு அருளையா சுப்பிரமணியம்**
(இராச வீதி, நீர்வேலி மேற்கு)
**திரு சி. குமாரசாமி J.P**
(அச்சுவேலி)
**திரு சீ. சி. கந்தையா**
(பலாலி, ஆவரங்கால்)
**அதிபர்**
(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி)
**திரு பொ. குமாரசாமி**
(சட்டத்தரணி நவிண்டில்)
**திரு ச. ஹரிகரன்**
(ரகுராமன் தொலைத் தொடர்பு நிலையம், கரணவாய்)
**திரு சி. சுப்பிரமணியம் D.L.O**
(சமரபாகு, உடுப்பிட்டி)
**திரு தி. கருணாகரன் (கரன் எலக்ரோனிக்)**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**திரு வ. செல்வமோகன்**
(மோகன் கடை, ஆவரங்கால் மத்தி)
**திரு வே. இராஜேந்திரா**
(பொது சுகாதார பரிசோதகர், ஆவரங்கால்)
**திரு க. தர்மதுலசிங்கம்**
(ஜெப இல்லம், உடுப்பிட்டி)





உ

# விழிக்குத் துணை

இரா சிவ. அன்பு அவர்கள்.

எமது உடம்பு குகப்பெருமான் குடியிருக்கும் குகாலயம். "உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டபின் உடம்பினை நானிருந்தோம்புகின்றேனே.... திருமந்திரம்.

எண்சாண் உடம்பில் சிரசே பிரதானம். அந்தச் சிரசிலும் கண்ணே மிகச் சிறந்தது. நமது மற்றைய உறுப்புக்கள் எல்லாம் வளர்ச்சியடைகின்றன. ஆனால் கண் மட்டும் வளர்வதில்லை. ஆனாலும் அதுவே சிறந்தது. ஆகவேதான் இறைவனை "கண்ணே! கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" என்று பாடியுள்ளனர். இறைவனை மட்டுமா? அன்புக் குரியவர்களையெல்லாம் "கண்ணே!" என்றழைக்கிறோம் அல்லவா? குழந்தைகளை....

நம் பார்வைக்கு ஒளியின் துணை தேவை. விஞ்ஞானத்தின் படியும் ஒளிக்கதிர்கள் பொருட்களிற் பட்டுத் தெறித்துக் கண்படலத்தின் வழி நுழைந்து விழித்திரையில் பிம்பத்தை ஏற்படுத்துகின்றது. அங்கிருந்து அது மின்காந்த அலைகள் மூலம் மூளைக்குச் சென்று பார்க்கும் பொருளின் பிரதி பிம்பத்தை மூளையிற் பதிவு செய்தது பார்க்க முடிகின்றது. சிலரைப் பார்த்த மாத்திரத்தில் வெறுப்பு, கோபம் ஏற்படுகின்றன. இன்றும் சிலரைப்பார்க்கும் போது அன்பு, பாசம், காதல் இப்படிப்பல உணர்வுகளும் ஏற்படுகின்றன. ஏன்? ஒளி அலைகளிற் கேடு இல்லை விழித் திரையில் தீமை இல்லை மின் அலைகளில் இல்லை. பொருட்களின் பிம்பங்கள் ஒரே செயற்பாடாகவே நிகழ்கின்றன. ஆனால் மூளையில் ஏற்கெனவே பதியப்பெற்ற தீய எண்ணங்கள் உடனடியாகச் சேர்ந்து செயற்படுகின்ற படியால் இப்பேற்பட்ட விருப்பு வெறுப்புக்கள் பார்வையில் ஏற்படுகின்றன.

இதைத் தவிர்க்க விழிக்கு ஆன்மீக ஒளித்துணை தேவை அது விருப்பு, வெறுப்பு, கோபம், பொறாமை, பெருமை, சிறுமை இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது.

ஆகவே தான் விழிகளை இறைவன் திருப்பாதங்களை நோக்கி அந்தப் பேரொளியின் கருணைத்துணை கிடைக்க வேண்டும் என்று அடியவர்கள் திருவடிகளையே கண்டார்கள்.

"நாயினேன் தன் கண்ணினை நின் திருப்
பாதப் போதுக்காக்கி... என்பார் மணிவாசகர்

முருகன் பிள்ளைத்தமிழ்ப் பாடலில் ஒரு காட்சி வருகின்றது. முருகன் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை "முழுதும் அழகிய குமர.." என்றார் அருணகிரியார்.

நம்முள்ளே சிலருக்குச்சில அவயவங்கள் அமாராக இருக்கும். சிலருக்கு உடம்பு வாட்டசாட்டமாக இருக்கும். ஆனால் கழுத்தே இருக்காது. கால், கையெல்லாம் பெரிய பயில்வான்

மாதிரி இருக்கும்; ஆனால் முகம் அவ சரத்திற் பிடித்த கொழுக்கட்டை மாதிரி இருக்கும். இப்படிப்பல உதாரணம் சொல்லலாம் தேவர்களுக்குக் கூட ஒரு அவயவம் தான் அதிசிறந்த அழகுள் ளதாக இருக்குமாம். அழகுக்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடப்படும் தங்கள் அவயவங்கள் முருகனின் அவயவங்கள் முன் வலிகுன்றி நின்றதை அவர்கள் கண்டு தலைகுனிந்தனராம் வழக்கில் கூட முகத்தழகு விழிக்குத்தான் விசேடம். பேச்சுவழக்கிற் கூட "அவள் முகத்தைப் பார் லக்ஷ்மி மாதிரி இருக்கு" என்று கூறுவர். அந்த இலக்குமிதேவி தான் மாமி என்பதையும் மறந்து முருக னின் முகத்தழகைப் பார்த்து இலயித் தாளாம் திருமாலுக்குத்தான் கண்ணழகு அதற்காகக் "கண்ணன்" என்றே சிறப்புப் பேர் பெற்றார். "செங்கண்மால்...என்று புகழப்படுபவன். தன் கண்ணழகை விட முருகனின் கண்ணழகு உயர்ந்து துலங் குவதை அவன் கண்டு புளகாங்கித மடைந்தானாம். கலைவாணியாகிய சரஸ்வதிக்குச் சொல்லழகு. அவள் தன்னை விட உயர்ந்த வாயழகை முருகனிடம் ஆராய்கிறாள். சிவனாருக் குச் சொற்பொருளழகு நக்கீரனுடனேயே சொற்போர் புரிந்து திருவிளையாடல் புரிந்தவரல்லவா. தன் குமாரனின் சொற் பொருளின் அழகு தன்னை விஞ்சி நிற்பதைக் கண்டு களிபேருவகை கொள் கின்றாராம். தோள் அழகு இந்தி ராணிக்கு அவள் முருகனின் பன்னிரு தோள் அழகினை ஆய்ந்து மெச்சு கின்றாள்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு அவயவத்தினைப் பார்த்துப் பிரமித்து நிற்க, களங்கமில்லா மனத்து அடியவர்களோ! அடியழகு கண்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு அவயவத்தைப் பற்றிநிற்கட்டும் எமக்கு அவன் மென்மை யான மலர் போன்ற ஒளி பொருந்திய திருவடிகள் இரண்டும் போதுமே! என நின்றார்கள்.

ஆகவே தான் அவர்களை "அடியவர்கள்" என்றார்கள். "முடியவர் கள் முகத்தவர்கள் மூக்கவர்கள் என்று கூறவில்லையே இதோ பாடல் அடியவர் கள் என்பது ஒரு பேறு

கமல மடமங்கை வதனத்து
அழகு காண்பள் - அக்
கரிய முகில் வண்ணனோ
கண்ணழகு காண்பன்
அரிய முக்கட் தாதையோ சொற்
பொருளின் அழகு காண்பர்
வளர் கலை வாணி
சொல்லழகு காண்பள்
வீறுதோளழகு இந்தி
ராணி காண்பள்
நிமல மன அடியர்
அடியழகு காண்பர்

வேகமாக முடிபு எடுப்பதைவிட விவேகமாக முடிபு செய்.

என்றார். அதைத்தான் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின் முதல்வரியில் "விழிக்குத்துணை திருமென் மலர்ப் பாதங்கள்" என்று உணர்ந்து பாடினார்.

ஆகவே, எமது விழிகளின் பார்வை செம்மையாகவும் தெளிவாகவும் தூயதாகவும் அமையவேண்டுமானால் செவ்வேட் பரமனது மென்மையான மலர்போன்ற அருள் ஒளிவீசும் திருவடி களின் துணை நமக்கு என்றென்றும் தேவை. கண்கள் பெற்ற பயன் அவரின் அழகிய கோலத்தைக் கண்டு களித்து அதன் துணைக்கொண்டு உலகினைக் காண்பதே. அது என்றும் எமக்கு நன்மையே பயக்கும்.

## பக்திப்பாமாலை நூல் வெளியீடு

23.08.2005 கொழும்புத் தமிழ்சங்க மண்டபத்தில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக்கு ஐந்து பெண்களால் ஏற்றப்பட்டு தேவாரத்துடன் ஆரம்பமானது. பக்திப்பாமாலையில் இருந்து சில பாடல்களை சங்கீத கலாவித்தகர் திருமதி நவமணி பத்மநாதன் அவர்களும் கலாபூஷணம் வ. மாணிக்கவேல் அவர்களும் பாடினார்கள். "திருப்பணித்தவமணி" சி. தியாகராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் J.P. தலைமையுரை நிகழ்த்தி நூல் தொகுப்பாசிரியர் தம்பு துரைராசாவை பாராட்டிப் பொன்னாடை போர்த்தியும் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் J.P. மலர்மாலை அணிந்தும் கௌரவித்தனர். அருள்மொழியரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் நூல் பற்றிய சிந்தனைகள் என்ற தலைப்பில் உரையாற்றினார். பக்திப்பாமாலை என்ற தொகுப்பில் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் மீது இலங்கை வரகவிகளான அருட்கவி சீ. விநாசித்தம்பி கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம் கவிஞர் கலாநிதி வி. கந்தவனம் புராணவித்தகர் மு. தியாகராசா ஆழ்கடலான் முருகவே பரமநாதன் முதலியோரைக்கொண்டு பாடல்கள் வகுத்தும் பைந்தமிழ் வளர்த்த சான்றோர்கள் ஞானியர்கள், சித்தர்கள் இவர்களின் வாழ்க்கை வரலாறுகளை திருவுருவப் படங்களுடன் வெளியிட்டும், அருள் மணம்கமழும் சந்தனமாலையாக்கி படைத்திருக்கிறார் திரு தம்பு துரைராசா. அனைவரும் பக்திப்பாமாலையைப் பெற்று நுகர்ந்து பயன்பெருமாறு வேண்டி அமைகின்றேன். வளர்க சிவத்தொண்டு எனக்குறிப்பிட்டார்.


மலரில் 100க்கு மேற்பட்ட பாடல்களும்
100க்கு மேற்பட்ட திருவுருவப்படங்களும் இடம்பெற்றுள்ளன.

நூல் முதற்பிரதியைப் 'யோகாறேடிங்' அதிபர் திரு வே. செ. பேரின்பம் பெற்றுக்கொண்டார் நூல்வெளிவர பொருளுதவிபுரிந்த கலாநிதி V. இலகுப்பிள்ளை அவர்களுக்கும் மற்றயோருக்கும் நன்றி கூறப்பட்டது பக்கம் 102 விலை ரூபா100 கீழ் உள்ள முகவரிக்கு M/O அனுப்பி நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

த. துரைராசா "திருவாசகம்"
31A ஜானகி லேன், பம்பலப்பிட்டி
கொழும்பு - 04.

தன்னைத் திருத்திக்கொள்வதில் தளர்ச்சியே கூடாது.

உ



# ஆலயத் திருப்பணிச் சபை

திரு மு. மகேஸ்வரன் அவர்கள்.

ஆண்டாண்டு காலமாக இயற்கைச் சீற்றத்திற்கும் அந்நிய படையெடுப்புக்கும் முகம் கொடுத்து இன்றுவரை மிடுக்காக நிலைத்து இருப்பது இந்து ஆலயங்கள் என்றால் மிகையாகாது. ஆலயங்கள் நிர்வாக மையங்களாகவும் வியாபித்திருந்தமைக்குச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. உதாரணமாக, கேதீச்சரம், கோணேஸ்வரம், முனீஸ்வரம், நல்லூர் போன்ற ஆலயங்களைக் குறிப்பிடலாம்.

ஆலயங்கள் வளர்வதற்கு வளங்கள் வேண்டும். நிலவளம், நீர்வளம் சூழல் அமைதல் அவசியம். நந்தவனம், மந்தைகள், வயல்கள் சூழ அமைந்திருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. அர்ச்சகர், ஓதுவார் வாத்தியக் கலைஞர், சிற்பாச்சாரியார் போன்றோருக்கான பயில்வு மையங்கள், குடியிருப்புக்கள் ஆலயச் சூழலில் இருந்துள்ளன. இதனால், கலைகள் வளர்ச்சி அடைந்ததுடன் பலருக்குத் தொழில் வாய்ப்பும் கிடைத்து வந்துள்ளது. ஆலயத் திருப்பணிகள் திட்டமிட்ட வகையிற் படிப்படியாக வளர்க்கப்படல் வேண்டும். பொருத்தமான வீதியில்லாத கோயிலுக்குப் பாரியதேர், செய்வதோ, பாதுகாக்க வசதியற்ற முறையில் வாகனங்கள் அன்பளிப்பதோ, நீர்வசதியின்றிப் பூங்கா அமைப்பதோ வீண்விரயமாகும். முதலில் வசதி, பின் அமைப்பு எனச் செயற்படுத்தல் வேண்டும். ஆலயத்திருப்பணி மனிதருக்குப் பயன் மிக்கதாவும் தொடர் பயன்பாட்டுக்குகந்ததாகவும் செயற்படுத்தல் வேண்டும். திருவிழாக் காலத்துடன் மூடிவைப்பதன்று திருக்கோவில் அது நாளாந்தம் மனிதருடன் ஒன்றிணைக்கத்தக்கதாகத் திட்டமிட்டு திருப்பணிகள் செய்தல் சாலச்சிறந்தது.

வடக்கில் துர்க்கையம்மன் தேவஸ்தானம் ஆலயப்புனர் நிர்மாண வடிவத்தில் முன்னோடியான அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளமை முன்னுதாரணமாகக் கூறலாம். அனாதரவானவர்களை அரவணைக்கும் பராமரிப்பு மையம், உணவுச்சாலை, நூலகம் போன்ற கட்டுமானங்களை அமைத்ததன் மூலம் நிர்வாகக்கட்டமைப்பின் ஒரு மையமாக உருவாகி வருவதைப் பாராட்டாதிருக்கமுடியாது. இந்துமதத் தாபனங்கள் சில தனிப்பட்ட முறையிற் சேவையாற்றி வருவதை மறுக்க முடியாத போதிலும் ஓர் ஆலயச்சூழலில் இப்பணிகள் செய்யப்படில் அதன் பயன் பலமடங்காகும். இன்று பிரபலமான ஆலயங்கள் மக்களுடன் இணைந்த இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடத் தயங்குவது துர்அதிஷ்டவசமானது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த பிறமதத் தாபனங்கள் அநாதரவானவர்களை அரவணைத்துத் தமது மதத்தைப் பரப்புவது கண்கூடு. இதற்காக மதமாற்றச் சட்டம் கொண்டுவருவதை விட அதன் காரணத்தைப் புரிந்து ஆலயங்கள் அந்நிய மதத்தாபனங்கள் செய்வதைத்

பண்பில்லாத இடத்திற் சுதந்திரம் இருக்கமுடியாது.

தாம் மேற்கொள்ள முடியும். இன்று புலம் பெயர் மக்களும் அரசும் ஆலயத்திற்கு வழங்கும் நிதிகள் திட்டமிடாது வீணடிக்கப்படுவது கவலைதரும் விடயமாகும். அந்நிதி ஆலயத்தின் மீண்டுவரும் நிதியாகவோ பொதுமக் களுக்கு உதவும் கட்டடங்களாகவோ அமைக்கப்படின் வரவேற்புக்குரியதாகும்.

சகல ஆலய நிர்வாகக் கட்ட மைப்புக்களும் ஒருங்கிணைந்த பிரதேசக் கட்டமைப்பாகவும், பிரதேசக் கட்டமைப் புக்கள் நாடளாவியரீதியில் ஒரு கட்ட மைப்புக்குள் அமைப்பது வரவேற்புக் குரியது. இந்து கலாசார அமைச்சு மேற்படி சபையின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்குவதுடன் உரிய முறையில் நிதி பயன்படுத்த உதவலாம். பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் ஆலயங் கள், ஆச்சிரமங்கள், கலாசார மையங் கள் ஒன்றிணைத்து ஓர் நிர்வாக அலகு உருவாக்குவதன் மூலம் யாவும் முன் னேற வாய்ப்பாகும். கலாசார அலுவ லர், பிரதேச செயலர் மூலம் அமைச்சு பல திட்டங்களை நடைமுறைப்படுத்த லாம். ஆலயத் திருப்பணிகள் சமூகத் துடன் இணைந்த கூட்டு நிர்வாக மைய மொன்றை இலக்காகக் கொண்டு இயங்கவேண்டும். பலநோக்குக் கொண்ட ஆலயமே பரிபூரண ஆலயமாக மிளிர முடியும்.

## "எமக்கருள்வாய் வேலவனே"

"முன்னை வினைகளெல்லாம் தீர்த்தருளவேண்டுமென்றே
நாடி உனை நாங்கள் ஓடியே வந்தோமய்யா
ஆற்றங்கரைப் பதியுறையும் கந்தா கதிர்வேலா
நம்பியே வந்தோம் எமைக் காத்தருள வேண்டுகிறோம்
பட்டதுயர் மாயவென்று கைகூப்பி உனைத்தொழுது
நாளும் பொழுதும் உன் புகழைப் பாடுகிறோம்
தந்திடுவாய் நற்பலனை வள்ளிமணவாளா நீ எமக்கு
மாங்கனியை நீ பெறவே மயிலேறி வலம் வந்தாய்
சூரனைச் சங்கரித்து அமரர் குறை தீர்த்தாய்
ஔவைக்கு உபதேசம் நாவலடியில் நீ கொடுத்தாய்
அப்பன் சிவனார்க்கு ஞானமழை நீ பொழிந்தாய்
உன் புகழைப் பாடுவதற்கோ யுகங்கள் போதாதய்யா
சுந்தரத் தமிழ் காக்க எமக்கருள்வாய் சந்நிதிவேலா"

*-நயினை விஜயன்-*

---

பிறருடைய உடமையோ உயிருள்ள பொருளோ நமக்கு எட்டாக்கனிபோல் கசக்க வேண்டும். பிறர் பொருளை விரும்புதல் கூடாது. பிறகு தன் பொருளில் வைக்கும் பற்றையும் அறவே அகற்ற வேண்டும். இதுதான் பிறவிப் பிணியை மாற்றும் மார்க்கமாகும்.

*-வாரியார்-*

**கண்ணிழந்தவனுக்குத் தெரியும் காட்சியின் மகிமை.**

உ

# தலப்பெருமைகளுடன் சம்பந்தரின் தெய்வப் பனுவல்கள்

மாலினி குணரத்தினம் அவர்கள்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்து ஞானத்தால் ஞானியர் நவின்றவையே திருமுறைகள் எனும் அரிய தெய்வப் பனுவல்களாகும். இதில் முதல் மூன்றும் முதிர்ந்து விளைந்த சிவபுண்ணிய மேலீட்டால் இளமையிலேயே சிவஞானம் கைவரப்பெற்ற செம்மல் திருஞான சம்பந்தரால் அருளப்பெற்றவை

"பிறவி எனும் பொல்லாப் பெருங்கடலைநீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் - நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன் மாலை ஞானத் தமிழ்"

இத்தகைய சிறப்புப் பெற்ற சம்பந்தரின் ஞானப்பனுவல்களைத் தலச்சிறப்புடன் கண்டு கொள்வோம்.

1. சீகாழி (சீர்காழி)

திருவருட் பராசக்தி சிவஞான அமுதத்தை ஊட்ட உண்டவாய் புலர் வதன்முன் சீகாழியிலே இயம்பப் பெற்றதே "தோடுடைய செவியன்" என்ற முதற்பாடல். "பல்பெயர்ப்பத்து" எனச் சிறப்பிக்கப் பெற்றதலம் சீகாழி. இங்குள்ள மலையில் இறைவன் ரோமச முனிவருக்காகத் திருக்கயிலைச் சிகரமொன்றைத் தென்திசையில் தோற்றுவித்துத் தானும் அம்மையுமாக இருந்து அருளாட்சி புரியும் இடம் இது. இங்கு குரு, இலிங்கம், சங்கமமாகிய மூன்று மூர்த்தங்களும் வழிபடப்படுகின்றன. குரு மூர்த்தம் தோணியப்பர், இலிங்கமூர்த்தம் பிரமபுரேசர், சங்கம மூர்த்தம் சட்டைநாதர். இங்குள்ள இறைவன் பிரமபுரீசுவரர் அம்மை திருநிலைநாயகி. இங்கு பிரமதீர்த்தம், காளிதீர்த்தம், கழுமலநதி, விநாயகநதி, புறவநதி முதலிய இருபத்திரண்டு தீர்த்தங்கள் உண்டு. சீகாழியிலே சித்திரைமாதம் பெருவிழா இடம்பெறும். இரண்டாந்திருவிழா திருமுலைப்பால் விழா, இங்கு இடம்பெறும் விழாவிற் பெரும்பாலானவை சம்பந்தரின் ஐதீகத்தை ஒட்டியே இடம் பெறுகின்றன.

"தோடுடைய செவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே"

2. திருப்புகலூர்

அடியார் புடைசூழத் திருப்புகலூருக்குச் சென்ற சம்பந்தர் திருக்கோவிலுக்குச் சென்று புகலூர்ப் பெருமையை உணர்த்து முகமாக அருளிய பதிகமே "குறிகலந்தவிசை" ஆகும். திருப்புகலூர்

ஆலயம் நாற்புறமும் அகழிசூழ நடுவில் இருக்கிறது. திருநாவுக்கரசர் முத்திபெற்ற தலம் முருகநாயனாருடைய அவதாரஸ் தலம். சுந்தரருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கிய தலமும் இதுவேயாகும். அக்கினி பகவான் பூசித்துப் பேறுபெற்ற தலமும் இதுவாகும். இங்குள்ள இறைவன் பெயர் அக்னிபுரேஸ்வரர். இறைவி கருந்தாழ் குழலியம்மை. இங்குள்ள தீர்த்தம், அக்னிதீர்த்தம் இதைப் பாண தீர்த்தமென்றும் அழைப்பர். புன்னை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட இத்தலத்தில் சித்திரைச் சதயத்தைப் பத்தாம் நாளாகக் கொண்டு விழா நடைபெறும்.

"குறிகலந்தவிசை பாடலினாலிசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்த தொரு நீர்மையனாயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடமொய்ம்மலரின்
பொறிகலந்த பொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே"

3. திருவலிதாயம்

சம்பந்தர் தம் பக்தரோடு வலிதாயத்தை வணங்கிய போது "பத்தரோடு..." எனும் பதிகத்தைப் பாடியருளினார். திருவலிதாயம்பாடி என அழைக்கப்படும். பாரத்வாஜமகரிஷி, வியாழன், அநுமான் முதலியோர் வழிபட்டு முத்தி பெற்றதாகத் இத்தலத்தில் தலபுராணம் கூறும். இங்குள்ள இறைவன் பெயர் வலிதாயநாதர். அம்மை தாயம்மை யாவார்.

"பத்தரோடுபல ரும்பொலியம்மல ரங்கைப்புனல் தூவி
ஒத்த சொல்லியுல கத்தவர் தாந்தொழு தேத்தவுயர் சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை கின்ற வலிதாயம்
சித்தம் வைத்தவடி யாரவர்மேலடை யாமற்றிடர்நோயே"

4. திருவீழிமிழலை

சீகாழியில் அம்மையப்பராக எழுந்தருளியிருக்கும் காட்சியை வீழிமிழலையில் இறைவன் காட்டஅதனைத் தரிசித்த சம்பந்தர் வினாவாகப் பாடியதே "மைம்மரு பூங்குழல்..." எனும் பாடலாகும். திருவீழிமிழலையில் உமாதேவியாரை இறைவன் திருமணம் செய்து மணக்கோலத்தோடு இருக்கிறார். திருமால் தமது சக்கரத்தைப் பெற்ற தலமும் இதுவே. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இறைவனிடம் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கிய தலமும் இதுவே ஆகும். இங்கு விஷ்ணுவால் தாபிக்கப் பெற்ற விண்ணிழி விமானம் உண்டு. மணக்கோலத் திருவிழா இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இறைவனின் திருவடியில் திருமால் கண்ணைப் பறித்து அர்ச்சித்த அடையாளம் இன்றும் இருக்கின்றது. இங்குள்ள இறைவனின் நாமம் நேத்திரார்ப்பணேசர் அம்மை சுந்தரகுசாம்பிகை.

நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.

"மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற
வாணுதல் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்க
ணீசவெ னீசவி தென்கொல் சொல்லாய்
மெய்ம்மொழி நான் மறை யோர்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே"

### 5. கீழைத் திருக்காட்டுப் பள்ளி

ஞானசம்பந்தர் தம் மெய்யடியார்கள் சூழக்கீழைத் திருக்காட்டுப் பள்ளி இறைவரை வணங்கும் போது பாடியதே "செய்யரு கேபுனல்" எனும் திருப்பாடலாகும்.

தேவேந்திரன் விருத்திராசுரனைக் கொன்றபழி நீங்கப் பூசித்துத் தேவலோக ஆட்சியை மீண்டும் பெற்ற தலமே கீழைத்திருக்காட்டுப் பள்ளி இங்கு நண்டு பூசித்த விநாயகர் சந்நிதியும் இருக்கிறது. இங்குள்ள இறைவர் ஆரணிய சுந்தரர். இறைவி அகிலாண்ட நாயகியாவார். இங்குள்ள தீர்த்தம் காவிரியாகும்.

"செய்யரு கேபுனல் பாயவோங்கிச்
செங்கயல் பாய்ச சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயலைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே"

### 6. திருச்செங்காட்டங்குடி

சம்பந்தப்பெருமான் மற்றைய தலங்களையும் வழிபடவேண்டும் என்ற எண்ணத்தோடு திருமருகற் கோயிலுக்குச் சென்றார். அங்கே மருகற் பெருமான் திருச்செங்காட்டங்குடிக் கணபதீச்சரத் திலுள்ள திருக்கோலத்தைக் காட்டியருளினார். அக்கோலத்தைக் கண்டு சம்பந்தர் பதிகம் பாடினார். அதுவே "அங்கமும் வேதமும்" எனும் பாடலாகும். இப்பதிகத்தில் திருமருகற் பெருமானைக் கணபதீச்சரங்காமுறக் காரணம் என்ன? என வினாவுவதாக அமைந்துள் ளது.

விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றபோது அவன் உடலினின்றும் பெருகிய இரத்த வெள்ளத்தால் இவ்விடம் முழுவதும் செந்நிறமாகியது அதனால் இத்தலம் செங்காடு, செங்காட்டங்குடி எனப் பெயர்பெற்றது. விநாயகர் கயமுகனைக் கொன்ற கறை நீங்கச் சிவலிங்கப் பெருமானைத்

ஒருவன் ஏழையாக இருந்தால் தவறு அவனுடையதுதான்.

தாபித்து வழிபட்டார். அதனால் கண பதீச்சரம் எனப் பெயர் பெற்றது இத் தலம்.

பைரவவேடம் தாங்கிய பரமனுக் குச் சிறுத்தொண்டர் தம்மகன் சீராள னைக் கறிசமைத்து உணவு படைத்து முத்தியடைந்த தலம் இது. இங்கே சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளன் ஆகியோரின் திருவுரு வங்கள் உண்டு. சித்திரைப் பூர்ணிமை யில் சிறுத்தொண்டர் திருவமுது படைத்த திருவிழா நடைபெறும். இது "அமுது படையல்" என்றே அழைக்கப் படுகிறது. இங்குள்ள இறைவன் பெயர் கணபதீச்சரத்தார் இறைவி திருக்குழல் நன்மாது. இங்கு பைரவகோலத்துடன் உத்திராபதியார் எழுந்தருளியுள்ளார்.

"அங்கமும் வேதமு மோதுநாவர்
அந்தணர் நாளு மடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகனிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதிச்சரங் காமுறவே"

7. திருவாலவாய்(மதுரை)

அடியார் புடைசூழ ஆலயத்திற் குச் சென்ற சம்பந்தர் நள்ளாறுடைய நம்பெருமானே; அமணர் செய்த வாதில் தீயிலிட்ட ஏட்டைப் பச்சையாக்கி என் னுள்ளத் துணையாகித் திருவாலவாயின் கண் அமர்ந்தவாறு என்னை? என்று வினாவிப் பாடுகிறார். "பாடகமெல்லடி..." என்ற பாடலே அதுவாகும்.

மதுரைத்தலத்திற்கு நான் மாடக் கூடல், திருவாலவாய், கடம்பவனம், சிவநகரம், ஜீவன் முத்திபுரம் எனப்பல பெயர்கள் கூறப்படுகின்றன. கடைச் சங்கம் அமைத்துத் தமிழ் ஆராய்ந்த தலைநகரம் இது. சொக்கலிங்கப் பெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய தனிநகரமும் இதுவே. மூர்த்தி நாயனார் விபூதி, உருத்திராக்கம், சடைமுடி மூன்றையும் துணைக்கொண்டு ஆண்டநகரம். சைவம் காத்தசம்பந்தர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் எழுந்தருளியதலம். மணிவாசகப்பெரு மான் மந்திரியாக இருந்து திருவாசகத் தேனை வடித்தெடுத்த திருப்பதியும் இதுவே. தருமபுரஆதீன முதற் பெருங் குரவர் குருஞானசம்பந்தர் சொக்கலிங்கப் பெருமானைப் பெற்ற இடமும் இதுவே. குமரகுருபரசுவாமிகள் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாட அம்மையே இருந்து கேட்டதலம். மீனானது தனது பார்வை யினாலே முட்டைகளைப் பொரிக்கச் செய்வது போல், மீனாட்சியம்மையும் தனது பார்வையினால் இங்கு அருளாட்சி செய்கிறார்.

இங்குள்ள இறைவர் சொக்க லிங்கப் பெருமான். அம்மை மீனாட்சி அம்மையார். இங்குள்ள தீர்த்தம் பொற்றாமரை, எழுகடல், வைகை

முதலியனவும் அடங்கும். விமானம் விண்ணிழி விமானமாகிய இந்திரவிமானம். இதனை இந்திரன் கொண்டு வந்து வைத்துச் சோமசுந்தரரைப் பூசித்தான் எனக் கூறப்படுகிறது. இவ்விமானம் எட்டு யானைகளால் தாங்கப்படுகிறது.

இரத்தின சபையிலே இராசசேகர பாண்டியனின் வேண்டுகோளுக்காகப் பெருமான் இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கி மாறியாடினார். குல சேகரபாண்டியன் இங்கு அர்த்தமண்டபம், மகாமண்டபம், மணிமண்டபம், அறுகாற் பீடம் முதலியவற்றைக் கட்டுவித்தான். மீனாட்சியம்மன் சந்நிதியில் அஷ்டசித்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வீரவசும்புராக மண்டபம், கல்யாணமண்டபம், ஆடிவீதி நிருதிவீதி மண்டபம், சம்பந்தர் மண்டபம், அறுபத்துமூவர் மண்டபம் எனப்பல மண்டபங்கள் உண்டு. இதில் ஆயிரங் கால் மண்டபமே சிறப்புமிக்கது.

சொக்கலிங்கப் பெருமானை அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிரவீசி ஆடுவான், அபிடேகச்சொக்கன், பண்ணிசைச் சொக்கன் எனப்பலபெயர் கொண்டு அழைப்பார்கள். அம்மையை அபிஷே கவல்லி, அங்கயற்கண்ணி, தமிழ் அறியும் பெருமாட்டி எனவும் அழைப்பர்.

"பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காட்டிடம் பற்றிநின்று
நாடக மாடுநள் ளாறுடைய
நம் பெருமானிது வென்கொல்சொல்லாய்
சூடக முன்கை மடந்தைமார்கள்
துணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடக மாட நெருங்கு கூடல்
ஆலவாயின்க ணமர்ந்தவாறே"

(தொடரும்....

## சந்நிதி முருகா இரக்கம் இல்லையா

சந்நிதி முருகா சஞ்சலம் தீரப்பா
சதாஉன் நினைவாய் காலம் கழிக்கிறேன்
எந்நிதி கொடுத்து உன்னருள் பெறுவது
ஏதுன் கருணைக் கெல்லையும் உண்டோ
தந்நிதி யெல்லாம் உன்தனுக் காக
தந்து நிற்கிறார் சந்நியா சியாக
இந்நிலை கண்டும் இரக்கம் இல்லையா
இதயம் உறையும் எழிலே கந்தா.

*-கவிஞர் வ. யோகானந்தசிவம்-*

**சிரிப்பும் அழுகையும் வாழ்க்கையின் தோழர்கள்.**

உ

# ஓம்

இரா செல்வவடிவேல் அவர்கள்.

இன்றைய உலகில் எந்தப் பகுதியில் வசிப்பவர்களாக இருப்பினும் நம் அனைவருக்கும் பொதுவாக ஒன்று இருப்பதை அறிய முடியும். அந்த ஒன்று தான் மன இறுக்கம் (Mental Tension) என்பதாகும். பெரியவர்களைப் பீடித்து ஆட்டும் இந்த மன இறுக்கம் துரதிஷ்ட வசமாக இன்று குழந்தைகளையும் பற்றிக் கொண்டுள்ளது.

திருவள்ளுவர், தேவாரம் பாடிய மூவர், மாணிக்கவாசகர், வள்ளலார் இராமகிருஷ்ணர் போன்ற மாமனிதர்கள் தோன்றி மக்களை நல்வழிப்படுத்த முயன்றார்கள். இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சிக்கு அளவே இல்லை. சூரிய மண்டலத்தை ஆராயவும், அணுவைப் பிளந்து அதனுள் அடங்கியிருக்கும் பேராற்றலை வெளிக்கொணரவும் இன்றைய மனிதன் வளர்ச்சி அடைந்து விட்டான். இவ்வெற்றிகள் அனைத்தும் கல்வியின் துணைக் கொண்டு புறத்தே நிகழும் செயல்கள் ஆகும்.

வள்ளுவன் குறளுக்குக் குறளோவியம் கண்டு விட்டோம். ஆழ்வார் பாசுரங்களுக்கு விளக்கவுரை கண்டு விட்டோம். அறிவின் வழி உதவி பெறக் குறள் கற்றவர்களும், பாசுரங்களைப் பயின்று பரப்புபவர்களும் மக்கட்சமுதாய முன்னேற்றத்திற்கு என்ன செய்தார்கள்? இந்த வினாக்கள் இன்று தான் உதித்ததல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவப் பேராசான் கற்றதனால் ஆய பயன் என்ன? என்று கேட்டார். நம்காலத்துப் பாரதி "பலகற்றும், பல கேட்டும் முத்துமாரியம்மா பயனென்றும் இல்லையடி முத்துமாரியம்மா" என்று தொடங்கி மனம் வெளுக்க வழியில்லையே என்று நொந்து கொள்கிறான். இவையெல்லாம் எதைக் குறிக்கின்றன. மனித சமுதாயம் புறவளர்ச்சி கண்டிருக்கிறதே, தவிர அகவளர்ச்சி காணவில்லை. இதனைச் சிந்தித்த நம் முன்னோர் பலர் இதற்கொரு வழியைக் காண முனைந்தனர்.

சமுதாயத்திற்கு நல்வழிகாட்டப் பலர் முனைந்தார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்தைத திருத்த முடியவில்லை. தனி மனிதனில் ஏற்படும் மாற்றம் தான் சமுதாய மாற்றத்திற்கு வித்திடும். அறவாழ்க்கை என்ற பெயரில் பல்வற்றைப் பலர் கூறியிருநத பொழுதும் வள்ளுவர் காட்டியது தனிவழியாகும்.

"மனத்துக்கண், மாசு இலன் ஆதல், அனைத்து அறன்.
ஆகுல நீர. பிற

-குறள் 34-

மனத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே உண்மையான அறம் ஆகும். மனமாசோடு செய்யப்படும் அறச் செயல்கள் யாவும் வெறும் ஆரவாரச் செயல்களே அன்றி உண்மையான அறச் செயல்கள் ஆகா. மன இறுக்கம் மனத்துக்கண் மாசு காரணமாகத் தோன்றியதாகும். இதனைப் போக்க வழி என்ன?

பெரியோர் மௌனம் அன்பைப் பெருக்கும்.

நம் முன்னோர் பலர் மெய்ஞ் ஞானியராகத் திகழ்ந்ததோடு அல்லாமல் விஞ்ஞானிகளாகவும் இருந்தனர் என்பதைக்காண முடியும். ஒலியின் (Sound) சிறப்பை, பெருமையை, ஆற்றலை விஞ்ஞானிகள் அறிவதற்கு முன்னர் நம் மெய்ஞ்ஞானியர் அறிந் திருந்தனர். அதிரும் பொருட்களினால் உண்டாக்கப்படும் ஒலிகள் அலைகளா கச் சென்று பரவுகின்றன. ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும் போது ஒரு குறிப்பிட்ட அதிர்வெண் (Frequency) அதற்குண்டு. மனிதனது செவி இருபது தொடக்கம் இருபதினாயிரம் கேட்ஸ் வரையுள்ள அதிர்வுகளை ஏற்கும் சக்தி உடையதாகும். கேட்ஸ் (Herts) என்பது அதிர்வை அளவிடப் பயன்படும் அலகாகும். மேலேகுறிப்பிட்ட அதிர் வெண் உடைய ஒலி தவிர்ந்த அதிர்வுக் குரிய ஒலியை நம்செவி கேட்காது.

விஞ்ஞானம் ஒலியைப் பயன் படுத்தி அரிய சாதனைகளை நிலை நாட்டி வருகிறது. அவற்றில் ஒன்று மிகு அதிர்வுஒலி (Ultro sound) இந்த மிகு ஒலியைப் பயன்படுத்திச் சிறுநீரகச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பார்வையற்றவர்களுக்கான கண்ணாடித் தயாரிப்பு, எண்ணெய் பிரித்தெடுப்பு போன்ற பல துறைகளிற் பயன்படுகிறது.

இத்தகைய அபூர்வ சக்தியு டைய ஒலியைப் பயன்படுத்தி மனித மனமாசை ஏன் போக்க முடியாது என்று நம் முன்னோர் சிந்தித்தனர். அந்தச் சிந்தனையின் விளைவாக நம்மாற் கேட்கமுடியாத கேளா ஒலிக்கும் அப் பாற்பட்ட ஒலியை அறிந்து அதற்கு ஆதிநாதம் என்று பெயரிட்டனர்.

எழுத்துக்களுக்குள்ள ஒலி ஆற்றலைக் கண்ட நம் முன்னோர்கள் பல அதிர்வெண்களை உடைய எழுத் துக்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் புதிய அதிர்வெண் உடைய சொற்களை உருவாக்கினார்கள். இத்தகைய புதிய சொற்கள் மனமாசைக் கழுவும் ஆற்ற லுடையவை என்று அறிந்து கொண்டு அவ் ஒலிக் கூட்டங்களுக்கு (சொற் களுக்கு) மந்திரங்கள் என்று பெயரிட் டனர்.

ஓம், கம், சௌம், க்ரீம் என்பன போன்ற மந்திரங்களுக்கு எவ்வித பொருளும் இல்லை. இவற்றை மூல எழுத்துக்கள் (பீஜாட் சரங்கள்) என்று கூறுவர். இம் மந்திரங்கள் மிகு அதிர்வு ஒலியின் பயனை விளைவிக்கின்றன. தனி மனிதனின் மன அடக்கப் பயிற்சி களுக்கு இத்தகைய மந்திரங்கள் பயன்படுகின்றன. இந்த மந்திரங்களை உச்சரிப்பதனால் மோட்சம் கிடைக்கும் என்று நம்பவேண்டாம். கடவுளைப் பற் றிக் கவலைப்படாமல் இம் மந்திரங் களைச் சில நிமிடம் உச்சரித்துப் பாருங் கள் மன இறுக்கமில்லாமல் வாழ வழி கிடைக்கும்.

ஓரிடத்திலிருந்து இம் மந்திரங் களைச் சில நிமிடங்கள் ஓம் நமச்சி வாய, ஓம் நாராயணாய, ஓம் சக்தி, ஓம் சரவணபவ என்று உச்சரியுங்கள். மன இறுக்கம் தளர்வதுடன் இரத்த அழுத்தம் குறையும். இரத்தத்திற் சர்க்கரை குறையும் இந்த உண்மையை இன்றைய அமெரிக்க விஞ்ஞானம் கூட ஏற்றுக் கொண்டு "தியானம்" என்று பேச ஆரம்பித்துள்ளது. நல்ல இசை மனத் திற்கு ஆறுதல் தரும் என்று கூறுவார்

அமைதியாய் இரு நீ எவரையும் வசப்படுத்தலாம்.

கள். தேவார, திருவாசகங்களை இசையோடு பாடிப் பாருங்கள். மனத்திற்கு எத்தகைய நிறைவு ஏற்படுகிறது என்று கண்டு கொள்ளமுடியும். இசையால் வசமாகாத இதயம் எது? ஆண்டவனை அழைப்பதற்கு முன்னர் மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு.. என்று பாடிப்பாருங்கள். மன இறுக்கம் நம்மை விட்டு ஓடிவிடும்.

அகர, உகர, மகரங்களின் சேர்க்கையினால் தோன்றியது ஓம் என்னும் மந்திரமாகும். "அ" என்ற ஒலி 'ரிக்' வேதத்திலிருந்தும் "உ" என்ற ஒலி யசுர் வேதத்திலிருந்தும் "ம்" என்ற ஒலி சாம வேதத்திலிருந்தும் எடுக்கப் பட்டவையாகும். ஓம் என்பது வேதம், வேதத்தின் சாரம், அதில் வேதம் முழுமையும் அடங்கியுள்ளது. "அ" என்பது இறைவனையும் "உ" என்பது ஜீவாத்மாவையும், "ம்" என்பது இறைவனுக்கு ஜீவன் என்றென்றும் தொண்டு புரிய வேண்டியவன் என்பதையும் உணர்த்தும், அ - உ - ம என்பவை பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியோரை உணர்த்துவதாகப் பெரியோர்கள் கூறுவர். இவ்வாறு "ஓம்" என்பதற்குப் பல வகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.

மற்றைய சொற்களுடன் ஓம் என்னும் மந்திரத்தைச் சேர்த்து உச்சரிக்கும் பொழுது அச் சொற்கூட்டம் சக்தியுடையதாக மாறுகிறது என்பது பிரதானமாகும். நமச்சிவாய என்று உச்சரிப்பதை விட ஓம் நமச்சிவாய என்று உச்சரிக்கும் பொழுது மிகு அதிர்வு, ஒலி விளைவு நமக்குக் கிடைக்கும் இதைப் பரிசீலித்துப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளுங்கள்.

சாதாரண மக்கள் பேசும் போது, தம்முடைய மனக்கருத்தை வெளிக்காட்டக் கூடிய சொற்களைத் தெரிந்து பேசுவதில்லை. பேசி முடிந்த பின்னர் இப்படிப் பேசியிருக்கலாம் என்று நினைக்கின்றோம். இதனைக் "குறைமொழி" என்பர். ஆயினும், நம் முன்னோர்கள் "நிறைமொழி" பேசுபவர்களாக இருந்தார்கள். -இவர்கள் நாம் பேசும் குறைமொழிச் சொற்களைத்தாம் நிறைமொழியாக்கிப் பேசினார்கள் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும். இந்த நிறைமொழிச் சொற்கள் ஆற்றல் மிக்கவையாகும். இவ்வாற்றல் எப்படி வந்தது என்று சிந்திக்க வேண்டும். முன்னர்க் குறிப்பிட்டபடி எல்லாச் சொற்களுக்கும் ஒரு அதிர்வெண் உண்டு. எந்த அதிர்வுடன் எதைச் சேர்த்தால் அவை புதிய ஆற்றலைப் பெறும் என்பதை அறிந்து அதிர்வுகளை ஒன்று சேர்த்துச் சக்தி மிக்க நிறைமொழிகளை ஆக்கினார்கள். ஆற்றல் பெற்ற சொற்கூட்டம் மந்திரங்களாக மாறிவிடுகின்றன. அதனைத் தான் தொல்காப்பியர்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி என்று குறிப்பிடுகிறார். நிறைமொழி பேசிய நம் முன்னோர் தம் ஆற்றலை இச் சொற்களிற் செலுத்தி அவற்றை நமக்குத் தந்திருக்கிறார்கள். இந்த விடயத்தைப் பின்வரும் செயல் மூலம் -விளக்கமுடியும். இன்று பௌதிகத்துறை விஞ்ஞானிகள் சூரியனின் ஆற்றலைச் சூரியக்கலங்களிற் சேமித்து மின்சாரமாக நமக்கு வழங்குகின்றார்கள் அல்லவா? இவ்வாறே நம் முன்னோர் ஆற்றல் மிகு சொற்களை ஆக்கினர். அவற்றின் ஆற்றலைப் பாமர

உள்ளதைச் சொன்னால் ஊருக்குப்பகை.

மக்கள் அறிந்துகொள்ள முடியாமல் இருக்கும் காரணத்தினால் தான் இவ் ஒலிக் கூட்டத்தைத் தொல்காப்பியர் மறைமொழி என்று குறிப்பிடுகிறார்.

நிறைமொழி மாந்தர்களால் உண்டு பண்ணப்பட்ட ஒலிக்கூட்டத்தை, மந்திரத்தைத் தனியே வீட்டில் இருந்து உச்சரிப்பதாலும் கோயில்களுக்குச் சென்று உச்சரிப்பதாலும் அதன் ஆற்றலைப் பெறமுடியும். சாதாரணமாக இந்தச் சொற்களை ஒருமுகப்பட்ட மனத்துடன் உச்சரிக்க வேண்டும் என்று சொல்வார்கள். இது பாமர மக்களினால் முடியாத காரியமாக இருக்கலாம். ஒருமுகப்பட்ட மனோநிலையில் அவை நிறைந்த ஆற்றலைத் தருகின்றன என்பது உண்மை. ஆனால் ஒருமுகப்பட்ட மனத்துடன் உச்சரிக்கப்படாவிட்டாலும் அவை பயன் தராமற் போவதில்லை. காரணம் ஒலி அதிர்வுகள் உண்டாவதால் அந்த அதிர்வுகளின் பயன் இருந்தே தீரும். இன்று மருத்துவ உலகம் இந்த அதிர்வு ஒலிச் சிகிச்சை மூலம் பெரிய பயனை அடைந்து வருவதை ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

சாதாரண மக்கள் "மந்திரங்கள்" இவை நம்மால் தீண்டப்படக் கூடாதவை என்று ஒட்டம் பிடிக்கின்றார்கள். அறியாமையினாலும் சில மதவாதிகளினாலும் இப்படியான ஒரு நிலையினை நாம் பார்க்கின்றோம். விஞ்ஞான உலகில் வாழும் நாம் சில விடயங்களிற் போராட்டத்தை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். "தியானம்" செய்வதனால் இரத்தக் கொதிப்பு அடங்கும் என்று இன்றைய விஞ்ஞானம் கண்டுபிடிப்பதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் நம் பெரியவர்கள், ஞானிகள், தபசிகள், சித்தர்கள் கண்டுபிடித்துத் தந்த நிறைமொழிச் சொற்களின் ஆற்றலைப் பயன்படுத்தி ஆற்றல் மிக்கவராக மிளிர வேண்டும். இளம் சந்ததியினருக்கு இவற்றை எடுத்தியம்பும் கடப்பாடு பெரியவர்களுக்கு உண்டு. பக்குவமாக எடுத்துக்கூறி நம் மதத்தில் உள்ள உயர்வுகளை அவர்களுக்கு விளக்கமுடியும்.

கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிட்டபடி மனித வாழ்வை அக வாழ்வு, புறவாழ்வு என்று பிரித்துக் கொள்ளலாம். புறவாழ்வுக்கு விஞ்ஞான அறிவு பயன்படுகிறது. அகவாழ்விற்குத் தேவையானது என்ன? என்ற சிந்தனையின் விளைவான இக்கட்டுரை பயன்தர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். அக வாழ்வில் வெற்றி, மன இறுக்கத்தை இல்லாமற் செய்யும். அதற்கு "ஓம்" என்ற மந்திரத்தை உரக்க உச்சரியுங்கள்.

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும். குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ? அது போல காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆனபடியால் சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி அன்பு என்ற சந்தனம் தெளித்து அறிவு என்ற விளக்கேற்றி உண்மை என்ற தூபம் கமழவை. இறைவன் அந்த உள்ளத்தில் எழுந்தருளுவான்.

*-கிருபானந்தவாரியார்-*

மதிக்காவிடத்துப் புத்திமதி கூறக்கூடாது.

உ

# தண்டியடிகள் நாயனார்

திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்.

திருவாரூரிற் பிறந்தவர்கள் யாவருமே வழிபடுதற்கு உரியவர்கள். அதனால் தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன் என்று பாடினார். அத்தகைய பேறு பெற்றவர்களுள் ஒருவராகிய தண்டியடிகள் நாயனார் புறக்கண் இல்லாதவராயினும் அகக்கண்ணில் எப்போதும் இறைவன் திருவடியைக் கண்டு இன்புறும் இயல்பு பெற்றிருந்தவர். நாள் தோறும் ஆரூர் எம்பெருமானை வணங்கிப் பஞ்சாட்சரத்தைச் செபித்துக் கொண்டே சென்று வந்தார்.

கோயிலின் மேற்கே உள்ள குளத்தைச் சுற்றி அக்காலத்தில் மடங்களைக் கட்டிக் கொண்டார்கள். வர வரக்குளத்தின் அளவு குறுகிக் கொண்டே வந்தது. அதனை அறிந்த தண்டியடிகள் நாயனார். இந்தத் திருக் குளத்தை அகழ்ந்து பெருக்கச் செய்ய வேண்டும் என முடிபு செய்து அதற்கு ஆனவற்றைச் செய்யத் தொடங்கினார். அங்கங்கே அடையாளமுளை நட்டுக் கயிறுகட்டி நடு இடத்தைக் கையாலே தடவிப்பார்த்து மண்வெட்டியால் வெட்டி மண்ணைப் புறத்தே கொட்டி மறுபடியும் வெட்டுவார் இத்தொண்டு செய்யும் போது திருவைந்தெழுத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தார். அவர் அக்குளத்தின் அளவைப்பெருப்பிருக்கும் பொருட்டு அகழ்வதைக் கண்ட சமணர்களுக்கு அவர் செயல் பொறுக்கவில்லை. அவரையணுகி மண்ணை அகழ்ந்தால் இங்குள்ள பிராணிகள் இறந்து விடும் அவற்றைத் துன்புறுத்தவேண்டாம்" என்றார்கள்.

அதுகேட்ட தண்டியடிகள் உண்மையறியாதவர்களே திருநீற்றை சாந்தாகப்பூணும் எம்பெருமானுக்கு உரிய திருப்பணி அல்லவா இது? இது மிகச் சிறந்த அறமென்பதை நீங்கள் அறிய முடியுமா? என்றார். அதனைக் கேட்ட சமணர் நாங்கள் எடுத்துச் சொல்லும் தருமத்தை நீ காதில் வாங்கிக் கொள்ளவில்லை. காதையும் இழந்தாயோ? என்று கேட்கத் தண்டியடிகள் மந்தமான அறிவும் காணாத கண்ணும் கேளாதசெவியும் உங்களுக்குத்தான் உள்ளன. நான் இறைவன் திருவடி களையே காண்கின்றேன் அன்றி மற்றவற்றைக் காண்பதில்லை. மற்றவர் களைப் போல நான் எல்லாப் பொருளையும் காணவல்லேன் ஆனால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார்.

அதைக்கேட்ட சமணர்கள் உன்னுடைய கடவுள் அருளால் நீ கண் பெற்றாயானால் நாங்கள் இந்த ஊரில இராமல் ஓடிப்போகிறோம் என்று சொல்லி அவர்கையில் இருந்த மண்வெட்டியைப் பறித்துக்கொண்டு முளைகளையும் கயிற்றையும் எடுத்து எறிந்தார்கள்.

அதனை உணர்ந்த தண்டியடி களுக்குக் கோபம் மூண்டது அவர் எம்பெருமான் சந்நிதியில் வந்து வணங்கி எம்பெருமானே. இன்று சமணர்கள் என்னை அவமானம் செய்துவிட்டார்களே.

குறை என்பது மனத்திற்றான் இருக்கிறது.

இந்தப்பழிதீர அருள வேண்டும் என்று நைந்து அடிவீழ்ந்தார். பின்பு தம் திரு மடத்துக்குச் சென்று இரவு தூங்கு கையில் இறைவன் எழுந்தருளி நீ மனக் கவலையை ஒழி. உன் கண்திறக்கவும் சமணர் விழியிழத்தலும் காணப் போகி றாய் அஞ்சவேண்டாம் என்று அருளி மறைந்தான் அப்பால் அன்று இரவே அரசனுடைய கனவில் தோன்றி தண்டி யடிகள் நமக்குக் குளந்தோண்டுவதைச் சமணர்கள் சகிக்காமல் இடையூறு செய்கிறார்கள். நீ அங்கே போய் அவன் கருத்தை நிறைவேற்று என்று சொல்லி மறைந்தான்.

உடனே அரசன் எழுந்து தண்டி யடிகள் நாயனாரிடம் சென்று பணிய அவர் எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்து உரைத்தார் சமணர் கூறியதையும் தான் கண்பெறுவதாகச் சொன்னதையும் அப்போது ஊரைவிட்டே ஓடுகிறோம் என்று அவர்கள் கூறியதையும் சொன்னார்.

அரசன் சமணர்களை அழைத்து விசாரித்தான் அவர்கள் முன் சொன்ன தையே சொன்னார்கள் அரசன் யாவரை யும் அழைத்துக்கொண்டு குளத்தை யடைந்தான் நாயனாரை நோக்கி உமது கண்களைத் திருவருளால் பெறமுடியும் என்பதைக் காட்டும் என்றான்.

தண்டியடிகள் உடனே எழுந்து நான் சிவனுக்கு அடிமையானது உண்மையானால் இன்று நான் கண் பெறவேண்டும். இங்குள்ள சமணர் கண்ணை இழக்கவேண்டும். என்று கூறி அஞ்செழுத்தை ஓதிக்குளத்தில் மூழ்கி னார்.

இறைவனைத் தொழுதபடியே அவர் நீரிலிருந்து எழுந்தபோது அவருக் குக் கண்ணொளி கிடைத்துவிட்டது அதே சமயத்தில் சமணர்கள் கண் ஒளியை இழந்தார்கள். மன்னன் சமணர் கள் முன்னேகூறிய உறுதிமொழிப்படி அவர்களை ஊரைவிட்டு ஓடச்செய்தான் அவர்கள் வெவ்வேறு இடங்களுக்குப் போய்விட்டனர். சமணர் மடங்கள் இருந்த இடங்களில் அவற்றை இடித்துக் குளத்தைப் பெருப்பிகச் செய்து தண்டி யடிகளை அடிபணிந்தான் அப்பெரியோர் கண்பெற்றதன் பயனாக இறைவனைத் தரிசித்து எப்போதும் அஞ்செழுத்தை ஓதி இன்புற்று இறுதியில் சிவபெருமான் திருவடி நீழலில் உற்றார். சைவத்தமிழ் மக்களாகியயாமும் அஞ்செழுத்தை ஓதி நல்வாழ்வு வாழ்ந்து இறைவனை அடைவோமாக.

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

காசுக்கட்டளை

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
*T.P. No. 021- 2263406*

காசோலை

**செ. மோகனதாஸ்**
**க. இல. P. 7481**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

திருட்டுப்பிழைப்பு என்றும் ஆபத்தானது.

உ (தொடர்ச்சி...

# ஒருமணித்துளிநேரம் சிந்தித்தோமா? சிந்திப்போமா?

திரு முருகவே பரமநாதன் அவர்கள்.

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கும்வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.
6 : 54 . 8

இவ்வண்ணம் சிந்தித்த ஞானசம்பந்தர் தன்மனத்துக்குச் சொல்வது போல ஒரு பாடல் தந்துள்ளார். அது நமக்கும் சாலப் பொருந்தும்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காடெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே

ஓமனமே! இந்த வாழ்க்கை நிலையற்றது. எவ்வளவு காலம் நாம் வாழப்போகிறோம். எப்போது நமக்கு வீழ்ச்சி வரும் என்பது எவருக்குமே புரியாது, தெரியாது எனவே (நீ) இறைவனைத் தினமும் தியானித்து நினைத்துக்கொள்- அதுமட்டும் போதாது. உன் உடம்பும் அதற்கு இசைவாக நடந்து கொள்ளவேண்டும். நாவிலே இறை நாமம் ஒலிக்க வேண்டும். தலை பூக்களைக் கூடையாகச் சுமந்து வந்து சொரிய வேண்டும். அது மட்டுமன்றி இறைவன் புகழைச் செவியும் கேட்டு மகிழ வேண்டும். என்ற சங்கதிகளை இப்பாடல் வாயிலாக நாம் அறியமுடிகிறது. வாழ்வியற்றர்மம் பற்றிப் பேசிய வள்ளுவனார். நீ பரநலம் கலந்த சுயநலத்தோடு வாழ்ந்தாற்றான் உன் ஆத்மாசுபிட்சமடையும் என்கிறார். தன்னலம் பேணுவதற்கு ஒருபடிமேலே பிறர்நலம் பேணவேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு வினைக்கும் எதிர்விளைவு உண்டு. எனவே எம்மைப் பேணவேண்டுமாயின் பிறருக்குத் தீவினை செய்யக்கூடாது. ஏனெனில் அது பந்து போல நம்மையே வந்தடையும் மறந்தும் பிறன்கேடு சூழக்கூடாது. சூழ்ந்தால் நம்மையே அது வந்துதாக்கும்.

தன்னைத்தான் காதலனாயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப் பால - குறள் 204

பிறருக்குச் செய்யும் தீமை நமக்கே துன்பம் தரும் ஆதலினால் - பிறருக்கு மறந்தும் துன்பம் செய்யாதே என்றார் பொய்யாமொழி

அறிவு அச்சத்தை முறிக்கும் மருந்து.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன கேடு. - குறள் 205

ஒட்டு மொத்தமாகத் தவிர்க்கமுடியாத முக்கியமான செயல் ஆனாலும் அதன்விளைவு - பயன் - தாழ்ந்தது - ஆயின் கைவிடு என்கிறது இன்னோர் குறட்பா.

இன்றியமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல் குறள் 967

நல்லவன் என்ற பெயர் வாங்குவது கஷ்டம். ஒரு நொடியிற் கெட்டவன் என்ற பெயர் பெற்றிடலாம். எனவே, எம் ஆத்மாவைத் தாக்கும் எச்செயலையும் மனிதம் மேற்கொள்ளக்கூடாது. மனித வாழ்வியலைச் சற்று நோட்டம் விட்டால் சுமைநிறைந்த வாழ்வில் ஓயாது உழைத்தாலும் தன் உயிர்க்கு உறுதியான - உய்தியளிக்கும் கருமங்களையே நாம் செய்தாற்றான் நம் ஜீவநதி தொடர்ந்து ஓடி இறைவனென்னும் பெருஞ்சமுத்திரத்திற் கலந்து அமைதி பெறும். இந்த நெடுஞ்சாலையில் நடக்கும் நாம் ஒவ்வொரு கணமும் உழைத்து உழைத்து ஓடானதுதான் மிச்சம். இதை மங்கையாழ்வார் படம் பிடித்துக்காட்டுகிறார்.

குலந்தா னெத்தனையும் பிறந்தெய்த் தொழிந்தேன்
நலந்தா னென்றுமிலேன் நல்லதோரறம் செய்துமிலேன்
பெரியதிருமொழி 1 : 9

எப்பாவம் பலவு மிவையேசெய் திளைத் தொழிந்தேன்
துப்பா நின்னடியே தொடர்ந் தேத்தவுங்கற் கின்றிலேன்
மேலது 5

புண்ணார் ஆக்கை தன்னுள் புலம்பித் தளர்ந்
தெய்த் தொழிந்தேன்
மேலது 6

தெரியேன் பாலகனாய்ப்
பலதீமைகள் செய்துவிட்டேன்
பெரியோ னாயினபின்
பிறர்க் கேயுழைத் தேழையானேன்
மேலது 7

இவ்வண்ணம் பல பிறவிகள் தோறும் பிறந்து, இறந்து ஏது பயனும் இன்றி நின்னையே தஞ்சமென வந்தடைந்தேன் என வேங்கடநாதனுக்கு முறையிடுகிறார் திருமங்கையாழ்வார். நம்வாழ்வியற் தர்மங்களை மேற்கொள்ளாமல் ஊரார்க்கு உழைத்து என்ன பயன் கண்டு விட்டோம். எனவே நமக்குக் கிடைத்த இந்த மானுடப் பிறவியைப் பயன்படுத்தி நம் ஆத்மாவுக்காக

உழைக்கவேண்டும் என்ற உண்மையை மனத்திற் கொண்டு ஆத்மலாபம் பெறுவோமாக. ஒவ்வொரு நாளும் 24 மணித்தியாலத்தில் குறைந்தது 15 நிமிடங்களேனும் இறைவனை நினைந்துருகுவோம். பிறர்நலம் பேணுவோம்.

கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தினைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றார் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண்கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக்குறியீர்
எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

அருட்பா ஆறாந்திருமுறை 1463

வானுயர் தோற்றம் என்செய்யுந்தன் நெஞ்சம்
தானறிகுற்றப் படின்

குறள் 272

மனிதம் புனிதமான பாதையிற் சென்று இனியனனை அடைவதே இறுதி இலக்கு.

(முற்றும்)

## சந்நிதி வேலா

வேலவரை நம்பி அன்பு கொண்டதால் மூன்றுவரி சொல்லித்தந்துவிட்டு மறைந்து விட்டார். அந்த மூன்றுவரி,

யாவர்க்கும் வலிமையெல்லோ ஞானமந்திரம்
அன்பரை அழைக்கும் அந்த அன்பு மந்திரம்
அடியார்க் கருள்புரியும் ஓம் மந்திரம்

2003ம் ஆண்டு தேர்கோலம் சரியும் போது வேலவர் உடன் தந்தார் இக்கருத்துக்களை,

சரிந்த கோலத்தில் தான் வரானோ
சங்கீதம் கேட்க தான் வரானோ
தேகங்கள் அழியும் உயிர் அழியா
கோலங்கள் அழியும் அவன் அழியான்
ஆடும் பாடும் பக்தரில் அவன் அழியான்
ஆனந்த கூத்தையும் அவன் தருவான்
அடியார்கள் மனதைக் கோணவிட்டான்
அதி சீக்கிரத்தில் அவன் வருவான்
ஆற்றம் கரை வேலவனோ கையளவு
அவனின் சக்தியோ ஆற்றளவு

*-சி மல்லிகாபதி-*

**வீண்பெருமை எவனையும் வீழ்த்திவிடும்.**

உ



# சித்திரத் தேரில் சிங்கார வேலன்

திரு கந்தைக் கணபதி அவர்கள்.

ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று தமிழ் மூதாட்டி ஔவையார் விதந்துரைத்தார்.

எல்லோருக்கும் எந்நேரமும் ஆலயம் சென்று வணங்கக் காலநேரம் வசதிகள் கிடைப்பது அரிது. அதனால் தான் எம்முன்னோர் சில முக்கிய தினங்களில் ஆயினும் இறைவனைத் தரிசிக்க எமக்கு வழிகாட்டியுள்ளனர். வருடம் தோறும் வரும் உற்சவகாலங் களிலேனும் சென்று வணங்கவேண்டும். உற்சவ காலங்களிற் கூட (பத்து பதினைந்து நாட்களிலும்) சிலருக்கு நேரம் கிடைப்பது அரிது அதனால் கொடியேற்றம், தேர், தீர்த்தம், எனும் சிறப்பு நாட்களிலேனும் இறைவனைத் தரிசிக்க வேண்டும். தேர்த்திருவிழாவுக் குச் சென்று வணங்குவது வருடம் முழுவதும் சென்று வணங்குவதற்குச் சமமாகும். தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொள்வது என்பது இறைவனுடன் இரண் டறக் கலப்பதற்குச் சமம். இதனையே திருவாசகம் தந்த மணிவாசகர்.

"ஆர்த்த பிறவித் துயர் கெட யாம்
ஆர்த்தாடும் தீர்த்தன் தில்லைச் சிற்றம்பலத்தே
தீ ஆடும் கூத்தன். என வர்ணித்திருக்கின்றார்.

பல நூற்றாண்டு காலமாகத் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கட்டுத்தேரில் வந்து அருள் பாலித்தார். 1994ஆம் ஆண்டு மாபெரும் புதிய சித்திரத்தேரிற் பவனிவந்து அடிய வர்களுக்குக் காட்சி கொடுத்தார். இரு ஆண்டுகளில் அத்தேர் வன்செயலால் அழிக்கப்பட்டது. மீண்டும் கந்தன் ஆறு ஆண்டுகளாகத் தனது பழைய கட்டுத் தேரில் திரு உலா வந்தார். 2003ஆம் ஆண்டில் அடியார்களின் அரஹரா கோஷம் வானைப் பிளக்க முன் வீதி கடந்து வள்ளியம்மன் வாசலில் வந்த போது மேற்கு வீதி மண்டபத்திற்கு அருகில் தேரின் மேற்பாகம் சரிந்து படபடவென முறிந்தது முறிந்த பாகம் அத்தனையும் மண்டபத் தீராந்தி தாங்கி யது. அடியார்கள் அனைவரும் அதி சயித்தனர் ஒரு உயிராபத்துமின்றி நடந்த நிகழ்வை நினைந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

எம்பெருமானுக்கு மறுவருடம் (2004) புதிய சித்திரத்தேர் ஒன்று இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு திரு தி. மகேஸ்வரனால் எட்டு மாதத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அடியார்களால் வேலனின் புதிய தேருடன் வேழ முகத்தோனுக்கும் ஒரு புதிய தேர் அமைத்துக் கொடுக்கப் பட்டது. முப்புரம் எரி செய்த அச்சிவ னுறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரருடைய தேர் முன்னே செல்ல ஆடும் மயிலினில் ஏறி அமரர்கள் சூழ இளையவர் பவனிவரும் கண்கொள்

ளாக் காட்சியை காணக்கண்கோடி வேண்டும். 2005ஆம் ஆண்டு ஆறுமுக சுவாமிக்கும் ஒரு புதிய தேர் உருவாகி வலம் வரும் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளில்லை. சந்நிதி வேல வனுக்கு மூன்று தேர்கள் மூத்தவருக்கு ஒரு முத்துத்தேர் சிங்கார வேலவனுக்கு சித்திரத்தேர். ஆறுமுகசுவாமிக்கு அலங் காரத் தேருமாக அமைந்தன. எம்பெரு மான் அடியார் மனத்தில் எழுந்தருளி மூன்று தேரையும் அமைக்க ஆசையூட்டி அவற்றை அமைப்பித்துள்ளார்.

தேர்த்திருவிழா அன்று வழமை போல உதய பூசை நிறைவேறித் தொடர்ந்து வசந்த மண்டபப்பூசை நடை பெற்றபின் பூசை ஆராதனைகள் பஞ்ச புராணம் ஓதுதல் நிறைவேறியபின் மூத்தவர் முன் செல்ல ஆறுமுகன் அருகில் வர வேலவன் பின் தொடர்ந்து ஆடி ஆடி அசைந்து அசைந்து உள்வீதி வலம்வந்து வள்ளியம்மன் வாசலில் நின்று பூசை முடிந்து காளாஞ்சி பெற்று, கிழக்கு வீதி முகப்பால் தேரடிக்கு வருகிறார். எங்கு பார்த்தாலும் அடியார் கூட்டம் நிறைந்து காணப்படுகின்றது. பத்தடி நடக்கப் பத்து நிமிடம் எடுக்கும் அங்கப்பிரதிட்டை அடி அழித்தல் கர்ப் பூரத்தீபம் தாங்குதல் சிறு இடைவெளி இல்லாமல் எங்கும் ஒரே பக்தர் கூட்டம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

விநாயகப்பெருமான் தனது முத்துத்தேரில் அமர்ந்து காட்சியளிப்பார் அடுத்ததாக வேலவன் சித்திரத்தேரிலும், ஆறுமுகசுவாமி அலங்காரத் தேரிலும் அமர்ந்து அடியவர்களுக்கு அருள் பாலிப் பார். குருக்கள் ஐயா தூப தீபங்காட்டி மணியடிக்க அடியார்கள் அரோஹரா எனக் கூறிக் கொண்டு வடம் பிடித்திழுக் கத் தேர்களெல்லாம் இருப்பிடத்திலிருந்து மெல்ல மெல்ல ஊரும். தேரில் இணைக்கப்பட்ட நூற்றெட்டு மணிகளும் கலீர் கலீர் என்று ஒலிக்க, சங்கொலி வானம் அதிர ஓசையெழுப்ப, நாதசுர மேளம் கானமழை பொழியும் கூட்டுப் பிரார்த்தனை செய்வோர் குழு குழுவாக எங்கும் நிறைந்து இன்னிசை முழங்குவர்

"வினை தீர்க்க வந்த வேலவனே வருக வருக
ஔவைக்கு அறம் உரைத்தவனே வருக வருக
தந்தைக்கு மந்திரம் சொன்னவனே வருக வருக
ஒரு தேர் அழிந்தாலும் மூன்றுதேர் பெற்றவனே வருக வருக
மருவும் அடியார் மனத்தில் விளையாடும் முருகா வருக வருக
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவனே வருக வருக
வேண்டுவார் வேண்டுவதை ஈபவனே வருக வருக

எனப் பலரும் பலவிதமாகக் கூறி வரவேற்று வணங்குவர். இவ்வாறாக எம்பெருமான் உலாவருகின்ற காட்சியைத் நேரில் காணமுடியாதவர்கள் காதாற் கேட்டு மகிழும் வண்ணம் இலங்கை வானொலி நிலையத்தார் நேர்முக வர்ணனையாக இந்த விழாக்காட்சியை வர்ணிப்பர்.

புரிநூலும் கண்டிகையும் பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் - திருவரையும்

நாதக்குழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்தணிந்த பரிபுரமும் சோதி
இளம் பருதி நூறாயிரங் கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும் உளந்தனிற் கண்(டு)
ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பரகத்தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே
ஓங்காரத்துள்ளொளிக்கும் உள்ளொளியே (கலிவெண்பா)
என்றும் புகழ் பாடுவார்கள்

ஒரு மணி நேரமாகத் தேர் அசைந்து நவசந்தி மூலைகளில் தரித்து நின்று மெல்ல மெல்ல வீதிவலம் வந்து இருப்பிடத்தை அடைந்தது. எம்பெருமான் இருப்பிடத்திற்கு வந்த போதும் அங்கப் பிரதிட்டை செய்பவர் உள் வீதியிலிருந்து வந்து கொண்டே இருக்கிறார்கள்.

தூக்குக்காவடிகள் நாற்புறமும் தெரியும் முதுகு, தொடை, கைமுட்டு எனும் அவயவங்களிற் செடில் முள்ளாற் குற்றி அந்தரத்தில் இருந்து பறந்து ஆடிக் கொண்டிருப்பர். இந்தத் தூக்குக் காவடி என்பது கடந்த அறுபது ஆண்டு களுக்கு முன் முதன் முதலாக இந்தச் செல்வச்சந்நிதியில் வல்வெட்டித்துறை யில் வசித்த ஒரு அன்பரால் தனது நேர்த்திக்காக எடுக்கப்பட்டது. பெரு மானைத் தரிசிக்க வரும் அடியார்கள் எம்பெருமானை மனங்கசிந்துருகி வணங்கி "ஐந்து பேறறிவும் கண்களே கொள்ள" எனும் சேக்கிழார் புராணத் தைப் பாடித்துதிப்பர்.

"பேராயிரம் பரணி விண்ணோர் ஏற்றும் பெருமானை
யாமும் பணிந்து வாழ்த்துவோம்"

## ஆன்மீக சாதனைக்குத் தடைகள்

ஆழமற்ற ஒரு குளத்திலிருந்து ஒருவன் தண்ணீர் குடிக்க விரும்பினால் நீரைக் கலக்காமல் மெதுவாக எடுக்கவேண்டும். நீரைக்கலக்கினால், அடியில் இருக்கும் வண்டல் கிளம்பி, நீர் சேறாகிவிடும். அது போல, கடவுளை நீ அறிய விரும்பினால், உன்னுடைய குருவிடம் நம்பிக்கை வைத்து, ஆன்மிக சாதனைகளைச் செய். வேத சாஸ்திரங்களைப் பற்றி தர்க்கம் செய்தல், வீண் விவாதத்தில் ஈடுபடுதல் ஆகியவற்றில் உன் சக்தியைச் செலவழிக்க வேண்டாம். நம்முடைய சிறு மூளை சீக்கிரத்தில் கலங்கிவிடுகிறது.

பிசாசு பிடித்தவன் மீது மந்திரித்த கடுகைத் தெளிப்பதால், பிசாசு ஓட்டப்படுகிறது. ஆனால் கடுகையே பிசாசு பிடித்திருந்தால் அது எப்படி பிசாசை ஓட்டும். அது போல, இறைவனைப் பற்றி நினைக்க வேண்டிய மனமே உலக விஷயங்களின் மீது பற்றுக் கொண்டிருந்தால், ஆன்மிக சாதனைகளில் வெற்றி பெற முடியும் என்று நீ எப்படி எதிர்பார்க்க முடியும்.

*-ஸ்ரீ இராமகிருஷ்ணர்-*

**வாழ்வு என்னும் மலரிலே அன்பு என்பதே தேன்.**

உ

தொடர்ச்சி...

# சித்தர்களின் சமய தத்துவக் கொள்கைகள்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்.

சித்தர்கள் பயிற்சி முறைகளோடு சேர்ந்து பக்தர்களுடைய உருவ வழிபாட்டு முறைகளும் சங்க காலத்துக்கு முன்பிருந்தே வழங்கி வந்துள்ளன. சித்தர்கள் கூறும் அருவவழிபாடு அக்காலத்தில் மேலோங்கி இருந்தமைக்குக் "கடவுள்" என்ற சொல்லே சான்று பகர்கின்றது. வழிபாட்டில் நால்வகை மார்க்கங்கள் விளக்கப்பட்டு அவற்றின் மூலம் பெறுதற்குரிய முத்தி நிலைகளும் நன்கு குறிப்பிடப்படுகின்றன. இதனை

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வானே"

என்பர்.

சிவசின்னங்களின் பெருமையினைத் தனியாக எடுத்துப்பேசுகிறார்.

(கங்காளன்) "கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்....." என்று சிறப்புப் பேசப்படுகின்றது. சிவபூசை தொடங்கும் போது உள்ளே நடுங்கி நின்று செய்யும் வழிபாட்டையே எண்ணுகிறார். இதனை

"உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானாற்கு வாய் கோபுரவாசல்....."

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார்.

திருக்கோயிலில் இறைவற்குத் திருவமுது படைத்தலிலும் அடியவர்களுக்கு அமுது படைத்தல் சிறந்தது என்பதன் மூலம் திருமூலர் சிவனடியார் வழிபாட்டின் பெருமையினைக் காட்டுகிறார்.

"படமாடக் கோயிற் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பற் கங்காகா...."

இப்பூசை எல்லாப் புண்ணியத்திலும் மிகவுயர்ந்த புண்ணியம் என்பர் சிவனோடு ஒப்பிடக் கூடிய தெய்வம் இல்லை என்ற கருத்தினைத் திருமூலர் வலியுறுத்துகிறார்.

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாரும் இல்லை...."

என்று கூறுகின்றார். இந்து சமயத்திற் கூறப்பட்ட அனைத்து வழிபாட்டு முறையினையும் சித்தர்களுடைய பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம் அவர்கள் கூறாத வழிபாட்டு முறையே இல்லை எனலாம்.

சித்தர்கள் பாடலின் மூலம் சமயம் மட்டுமன்றித் தத்துவம் பற்றிய

கருத்துக்களும் நிறைந்து காணப்படுகின்றன. திருமந்திரம் தோத்திரமாக மட்டுமன்றி சாத்திரமாகவும் விளங்குகின்றமைக்கு அதிற் கூறப்பட்ட கருத்துக்களே ஆதாரமாக உள்ளன. சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களான பதி, பசு, பாசம் மூன்றும் அனாதியானவை. என்றும் உள்ளவை என்பதைத் திருமந்திரப் பாடல்கள் எமக்குத் தூண்போன்று நின்று நிலை நாட்டுகின்றன.

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற் பசு பாசம் அனாதி..."

என்றும்

அறிவு என்ற அறிவு அனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி...." என்று நிறுவுகின்றன.

கடவுள் ஒருவரே என்ற கொள்கையும் வலியுறுத்தப்படுகின்றது. பாசம் பற்றிய கருத்தை நோக்கும் போது முதலில் முப்புரம் எரித்ததாவது மும்மலங்களை அழித்தமை என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது இதனை.

"அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்..."

என்னும் அடிகள் மூலம் சிறந்த தத்துவச்சிந்தனையினை எமக்கு அளித்து உள்ளார்.

மீண்டும் மீண்டும் ஈசன் ஐந்தொழில் ஆற்றுவதன் காரணம் கூறப்படுகின்றது. உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படுவதையும் எடுத்துக் கூறுகிறார்.

"ஒருவனே உலகேழும் படைத்தான்
ஒருவனே உலகேழும் அளித்தான்
ஒருவனே உலகேழும் துடைத்தான்
ஒருவனே உலகோடு உயிர் தானே"

என்ற பாடலில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்பவன் ஒருவனே என்று கூறப்பட்டுள்ளது. சக்தியின் சிறப்பினையும் சிறப்பாகக் கூறி உள்ளனர் சித்தர்கள். இதனைத் திருமந்திரம்

"புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி..." எனவும்
"அகிலம் சிவன் சக்தி விளையாட்டு...." எனவும்

விளக்கிநிற்கிறது. இறைவன் அறிவே சொருபமானவன் அவன் அறிவுடையான், அருமறையே, செவியுடையான், புலன் ஐந்தும் கடந்த குறியுடையாற் கூடுவர் என்றும் புலன் அறிவுக்கு அப்பாற் பட்டவன். பேரானந்தமான அறிவுச் சோதிஎன்பதால்

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

எனத் திருமந்திரம் விளக்குகின்றது. வினைகள் பற்றிச் சித்தர்களின் பாடல்களிற் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. முத்திப் பேறு பற்றியும் எடுத்துரைக்கப்படுகின்றது. இதனைத் திருமந்திரம்

"முத்திக்கு வித்து முதல்வன் பாதம்
பக்திக்கு வித்துப் பணிந்து பற்றவே..."

**தியாகத்திலும் பார்க்கப் பணிவு மிகவும் பெரியது.**

என்ற தத்துவ முத்துக்கள் நிறைந்த கருத்துக்கள் சித்தர் பாடலிற் காணப்பட்டாலும் அவற்றினை எல்லாம் ஒன்று திரட்டி இரத்தினச் சுருக்கமாக நாலடிப் பாடலில் திருமந்திரம் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

சிவவாக்கியாரின் கருத்து இங்கு மனங் கொள்ளத்தக்கதாக இருக்கின்றது.

"ஓசையுள்ள கல்லை நீர் உடைத்து இரண்டாய்ச் செய்துமே
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கின்றீர்
பூசனைக்கு வைத்த கல்லிற் பூவும் நீரும் சாத்தும்நீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக்கல் சொல்லுமே!

ஒரே கல்லை உடைத்து இரண்டு துண்டுகளில் ஒன்றைப் படி என்ற பெயரிட்டு மிதிக்கின்றோம். மற்றொன்றை இறைவன் என்று பெயரிட்டு மதிக்கின்றோம் எத்துணைப் பேதைமையானது இச்செயல் எனச் சாடுகின்றார். ஆகவே கோயில், குளம் முதலிய சென்று செய்யும் சடங்குகளும் வழிபாடுகளும் உண்மையான இறைநெறியாகா என்பது இவர்கள் தம் கொள்கை எனலாம்.

மாந்தர் வாழ்வைச் சீராக்க வந்த சமயம் சீரழித்தது தன் செல்வாக்கை இழந்தது அத்தகைய காலத்திலே தோன்றியவர்கள் தாம் சித்தர்கள். மக்களிடையே போலி வேடம் பூண்டுள்ளோரிடம் காணப்படும் மூட நம்பிக்கை, போலி வார்த்தை உரைத்தல் போன்றவற்றைக் கிள்ளி எறிய விழைந்தவர்கள் தான் சித்தர்கள் தாம் பெற்ற இறைத் தன்மையைக் கொண்டு மக்களது அறிவினைத் தட்டி எழுப்பினார்கள் சமயம், சமுதாயம், பண்பாடு, நாகரிகம், கலாசாரம் என்றால் என்ன என்பதை மக்களுக்கு ஐயம் திரிபற எடுத்துரைத்தவர்கள் தாம் சித்தர்கள். இன்றைய இந்துப் பண்பாடு ஒரு வாழும் இந்துப்பண்பாடாக நிலைபெற்ற இந்து சமயமாக மற்றைய மதங்களிலும் பார்க்க உயர்ந்ததாக உள்ளது. என்பதை நிலைநாட்டுவதற்கு ஆணி வேர் போன்றவர்கள் சித்தர்கள். இவர்கள் கருத்துக்கள் என்றும் அழியாது நிலை பெற்று வாழ்வனவாகவே உள்ளன.

சித்தர் இலக்கியங்களில் உள்ள பல இரகசியங்களைப் புரிந்து கொள்வதற்கு இன்னும் நாம் முன்னேறி நவீன விஞ்ஞான அறிவு மேலும் வளர வேண்டும் என்றே சொல்லத் தோன்றுகிறது காரணம் சித்தர்களின் கண்டுபிடிப்புக்கள் அத்தனை ஆழமாகவும் அத்தனை விரிவாகவும் பகுத்தறிவிற்குப் பொருந்துவனவாகவும் உண்மையினை வெளிக் கொணரும் தன்மையுடையனவாயும் நிற்கின்றன.

(முற்றும்)

ஊன் உறக்கம் இனப்பெருக்கம் ஆகிய இந்த மூன்றையும் அளவுகோலாக வைத்துப் பார்த்தால் எல்லா உயிரினங்களும் ஒரே வகையைச் சார்ந்ததாகவே கருதப்படும். ஆனால் மனித இனத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மனிதன் தர்மத்தைக் கடைப்பிடிப்பதால் மற்றவைகளைக் காட்டிலும் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான்.

**அரைகுறைப் படிப்புக்கு அகந்தை அதிகம்.**

உ

# "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திரு சி. சி. வரதராசா அவர்கள்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பது ஒரு வாழ்த்துப்பாவின் இறுதி வாழ்த்து. நீதி என்பது சட்டப்படியும் தரும நியாயப் படியும் முறையாக நடப்பது என்று பொருள். மனிதன் தருமம் இது, அதர்மம் இது, என்று வேறுபாடு அறியக் கூடிய வன். சைவநெறியைச் சேர்ந்தவன். உல கம் தனக்காக அல்லது மனிதனுக்கு மட்டும் படைக்கப்பட்டதென எண்ணுவ தில்லை. உயிருடையன உயிரல்லாதன அண்டசராசரங்கள் எல்லாவற்றிற்கு மாகவே படைக்கப்பட்டதாகக் கருது வான். ஆதலால், நீதி மக்களுக்கு மட்டுமன்றி விலங்குகள், மரங்கள், மலை கள், நதிகள் மற்றும் எல்லாப் பொருள்களுக்கும் பாதுகாப்பளிக்கின் றது. தமிழ் நூல்கள் பெரும்பாலும் நீதி நூல்களாகவே உள்ளன.

ஒரு மன்னனுக்கு ஒரே ஒரு புதல்வன். அந்த இளவரசன் தேரோட்டிச் செல்லுகையில், ஒரு பசுவின் கன்று தேர்ச்சக்கரத்திற் சிக்கிமாண்டது. கன்றை இழந்த பசு அரண்மனைக்கு ஓடிச்சென்று அங்கிருந்த ஆராய்ச்சி மணியை அடித்தது. மணி ஓசையைக் கேட்ட மன்னன் அங்கு வந்து பார்த்தான். பசு கண்ணீர் வடித்தது அதனுடன் சென்று இறந்து கிடந்த பசுக்கன்றைக் கண்டான். விசாரித்து உண்மை அறிந் தான். குற்றவாளியான தன் ஒரே மகன் மீது தேரோட்டச் செய்தான் மனுநீதி கண்ட சோழன் இறை அருளால் மன்ன னின் மகன் உயிர்த்ததுடன் பசுக்கன்றும் எழுந்தது என்பது கதை. மனிதருக்கு மட்டுமல்ல எல்லா உயிர்களுக்கும் கூட நீதி வழங்குவதே சைவநீதியாகும். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதே சைவர்களின் பிரார்த்தனை.

சைவநீதியின் மாண்பு அவ்வித மிருக்கையில் இன்று நம் சமூகத் திலுள்ள நியாயம் என்ன? விளக்கம் தேவையில்லை. சிவம் என்றால் அன்பு. சைவநீதி என்றால் அன்பு நெறியாகும். மக்களிடம் மட்டுமன்றி எல்லா உயிர் களிடத்தும் கூட நாம் அன்பு காட்டு வதாயின் நமது உலகம் எவ்வளவு இன்ப மயமாக இருக்கும்? இன்றுள்ள உலக நிலையில் இது நடவாத காரியமென்று தோன்றக்கூடும். ஆனால் அந்த "அன்பு நெறியை" "சைவநீதியை" ஒரு குறிக்கோளாகக் கொண்டு நாம் வாழ முற்பட முடியாதா? உலகத்திலே மேன்மை கொள் சைவநீதி நிலைக்க நாம் நீடுழி காலம் வாழ நம்மாலான தெய்வீக சமூகப்பணிகள், தொண்டு களைச் செய்தவர்களாவோம்.

"அறிவினால் ஆவதுண்டோ பிறிதின்நோய்
தன்னோய் போற் போற்றாக்கடை"

திருக்குறள்

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

தொடர்ச்சி..

உ



# அருணகிரி சுவாமிகள் அருளிய
# கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்.

### திருவருட் கவசம் இருப்பதால் இயமபயம் இல்லை.

வேலா யுதன் சங்கு சக்கராயுதன் விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்றந்த கந்த சுவாமி சுடர்க் குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுகண் டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே

வேற்படை தாங்கியவன் முருகன். சங்கு, சக்கரத்தைக் கொண்ட திருமாலும் பிரமதேவனும் தேடி அறிந்துகொள்ள முடியாத திரிசூலத்தைத் தாங்கிய சிவபெருமான் பெற்றருளிய ஆறுமுகக் கடவுள் ஒளிபொருந்திய உச்சிக் கொண்டையை உடையதும் காலையே ஆயுதமாகக் கொண்டதுமான சேவற் கொடியுடையவனது திருவருளாய கவசம் அடியேனுக்கு இருக்கின்றது. ஆதலால், எல்லோரையும் அடக்கும் அந்தக் கூற்றுவனோடு பகைக்கினும் அவனுடைய ஆயுதம் என்னிடம் வருமோ? வராது.

### இயமனின் சாவோலை என்செயும்

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமான் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

முருகக் கடவுளே அடைக்கலம் அடைக்கலம் என்று கூறித்தேவர் கூட்டந் துதிசெய்கின்ற அமராவதி என்னும் தேவருலகில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானுடைய மேன்மை பொருந்திய ஆறு திருமுகங்களையும் தரிசித்த சுற்றத்தவராகி இனிது வாழ்கின்ற ஒப்பற்ற ஞான வீரர்களாகிய தபோதனர்கட்கு, இங்கு எமராசன் கடைசிநேரத்தில் அனுப்பும் கடைஓலை வந்து என்ன செய்யும்? ஒன்றும் செய்யாது.

(சரணம் - அடைக்கலம், தமர் - சுற்றத்தவர்)

### அடியேனை ஈடேற்றுவாய்

வணங்கித் துதிக்க வறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண்டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக் கவிக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

காகமும், கழுகும் ஒன்றோடொன்று சண்டைபிடிக்கவும், பேய்கள் துணங்கை என்னும் கூத்தை மகிழ்ந்தாடவும், அவுணர்கள் தமது வாயிலிருந்து இரத்தத்தைக் கக்கவும், வெற்றி பொருந்திய வேற்படையை ஏவிய தூயவனே! உமது திருவடிகளைத் தலைதாழ்த்தி வணங்கிக் கரங்கூப்பிக் கும்பிடத்தெரியாத மனிதர்களோடு சேர்ந்து நற்குணங்கள் அழிந்த தீயவனாகிய அடியேனைக் கடைத்தேறச் செய்து அருள் புரிவாய்.

(இணங்கல் - சேரல், மலம் குற்றம், பிசிதர் - அவுணர்)

### என்னை விதிஓலையில் எழுதினால் இருவிலங்கு

பங்கே ருகனெனைப் பட்டோலை யிலிடப் பண்டுதளை
தங்கா லிலிட்டது அறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.

தாமரை மலராசனராய பிரமதேவன், அடியேனைத் தனது விதி ஏட்டில் எழுதினால் பிறப்பு இறப்புக்கு ஆளாக்க நேரிடும். முற்காலத்தில் தமது காலில் விலங்கு பூட்டியதை அறியானோ? சிலவேளை அதை மறந்து என்னை விதியேட்டில் எழுதமுற்படுவதை முருகன் தெரிவானாயின் ஒப்பற்ற வேலாயுதத்தை எடுத்து அலை பொங்கும் கடலானது வாய்விட்டலறவும், அழகிய கிரௌஞ்சமலை அழவும் செய்த முருகவேள் பிரம தேவனுக்கு முன்னைய சிறுவிலங்கல்லாது பெருவிலங்கே இடுவார்.

(பங்கம் - சேறு, பங்கேருகம் - தாமரை, பட்டோலை - விதியோலை, ஓதம் - கடல், பொன்னஞ்சிலம்பு - மேருமலை)

(தொடரும்...

மனம் பிறளாமல் இறைநெறியில் ஆழ்ந்து விடுபவனுக்கு பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள் பக்கமுண்டு, பவிசுண்டு, தவிசுண்டு யமபடர் அணுகாத கதியுண்டு, யானுமாகிய கதிருண்டு, காயசித்திகள் உண்டு.

*-தாயுமானவர்-*

பலவீனர்கள் மற்றவர்களைத் தூற்றுவார்கள்.

உ

# விபீஷண கீதை

திரு S.R சரவணபவன் அவர்கள்.

எல்லோரும் ஸ்ரீமத் பகவத்கீதை பற்றி அறிந்துள்ளோம். இன்னும் சிலர் பல்வேறு கீதைகளைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். அவை அஷ்டவக்கிரர் கீதை, ஹம்சகீதை, அவதூதகீதை என்பன. அனேகமாக எல்லாக் கீதைகளுமே சமஸ்கிருதமொழியில் உள்ளன. ஆனால் இந்த விபீஷண கீதை "அவாதி" என்ற மொழியில் உள்ளது. அவாதி என்பது ஹிந்தி மொழியின் ஒரு பிரிவு. இது இராமர் அவதரித்த அயோத்தியில் பேசப்பட்ட ஒரு மொழி.

விபீஷணகீதை துளசிதாசர் எழுதிய "துளசி" இராமாயணத்தில் ஆறாவது காண்டமாகிய 'லங்கா' காண்டத்தில் உள்ளது. துளசி இராமாயணத்தில் இராமகீதை, சிவகீதை, லக்ஷ்மணகீதை என்று பலகீதைகள் உள்ளன. "கீதை" என்பது சமஸ்கிருத மொழியில் "பாடல்கள்" என்று பொருள் படும்.

பகவத்கீதைக்கும், விபீஷண கீதைக்கும் இடையே ஒரு ஒற்றுமை உள்ளது. இரண்டிற்கும் போர்க்களப் பின்னணி உள்ளது. குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கப்பட்டது பகவத்கீதை. இலங்கை யுத்தகளத்தில் இராமரினால் விபீஷணனுக்கு உபதேசிக்கப்பட்டது விபீஷணகீதை. ஆனால் பிரச்சினைகளும், சூழ்நிலை களும் வேறானவை.

குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனன் மிகப்பெரிய கௌரவப்படைகளால் சூழப்பட்டுச் சரிஎது? பிழைஎது? என்று தீர்மானிக்கமுடியாமல் மதி மயங்கி நின்ற வேளையில் ஸ்ரீ கிருஷ்ணரால் உபதேசிக் கப்பட்டது பகவத்கீதை. ஆனால் விபீஷணகீதை உபதேசிக்கப்பட்ட நிலை வேறு.

ஸ்ரீ இராமர் போர்க்களத்தில் ஒரு புறத்திலும், மறுபுறத்தில் விபீஷணனின் சகோதரன் இராவணனும் நிற்கிறார்கள். இராவணன் அதர்மத்தின் உருவமாக நிற் கிறான். தனது தாய்மாமன் மாலியவான், மனைவி மண்டோதரியுடன் விபீஷணன் ஆகியோரின் அறிவுரைகளையும் மற்றும் அவனது அரசசபையில் இருந்த அறிஞர் களின் அறிவுரைகளையும் கேளாததனால் விபீஷணன் தர்மத்தின் வழியில் நிற்கும் இராமர்பக்கம் சேர்ந்த நிலையில் இந்தப் போதனை நடைபெறுகிறது. இராமாயண காலத்தில் நடைபெற்ற இப்போதனை இராமாயண காலத்தை விடத் தற்காலத் திற்குத்தான் மிகவும் பொருத்தப்பாடு உடையதாக உள்ளது.

நன்மைக்கும் தீமைக்கும், பெருந் தன்மைக்கும் கீழானபோக்கிற்கும் தர்மத் திற்கும் அதர்மத்திற்கும், இடையே நடை பெற்றுவரும் போராட்டம் முடிவடைய வில்லை. ஒவ்வொரு தனிமனித மனத் திலும், ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற்று வருகிறது.

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய்.

இராம இராவண யுத்தம் முடிவுறும் தறுவாய், இராவணன் தனது பெரிய போர்வீரர்களான கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோரை இழந்த பின் தானே நேரடியாகப் போர்க்களத்திற்குச் செல்ல வேண்டிய நிலை. ஒருவர் மற்றவரை முடிக்க வேண்டிய தீர்மானத்துடன் யுத்த களத்திற்கு வருகிறார்கள். நன்கு பாதுகாக்கப்பட்ட கவசங்கள் அணிந்து விசேடமாகத் தயார்செய்யப்பட்ட யுத்த ரதத்தில் எல்லாவித நவீன ஆயுதங்களுடனும் கம்பீரமாக வருகிறான் இராவணன். அங்கு இராமர் தேர் எதுமின்றி நிலத்தில் காலிற்குக் கூட எதுவும் அணியாமல், அம்பும் வில்லும் மட்டும் ஏந்தியபடி நிற்கிறார்.

இந்தக் காட்சியை விபீஷணன் பார்த்ததும், இராமரின் நலனிலும் பாதுகாப்பிலும், கவலைப்பட்டு இராமரிடம் பின்வருமாறு கேட்டான். "ஓ, பிரபுவே! பலவகையான நவீன ஆயுதங்களை ஏந்தியபடி கோபமும், பழிவாங்கும் எண்ணத்துடனும் தேரில் வந்திருக்கும் இந்த இராவணனை இந்தக் கோலத்தில் எப்படி வெல்ல முடியும்?" என்று இந்தச் சந்தேகத்தை அடிப்படையாகவைத்து ஒரு அருமையான சொற்பொழிவை இராமர் தருகிறார். அதுவே "விபீஷணகீதை" எனப்படுகிறது. துளசிதாசர் இந்த அழகிய போதனையை அருமையான ராகத்தில் தந்துள்ளார். அதன் கருத்து வருமாறு.

"இரதத்தினால் ஒருவர் அடையும் வெற்றி முழுவெற்றியாகாது. கவசங்கள், ஆயுதங்கள், உடற்பலம் ஆகியவற்றினால் இறுதி வெற்றியை அடைந்துவிடமுடியாது." தர்மத்தேர் என்றால் என்ன? அது எப்படிச் செல்லும் என்பதை அழகிய பாடல்கள்மூலம் இராமர் விளக்குகிறார். "வீரம், சகிப்புத்தன்மை ஆகிய இரண்டும் தேரின் சக்கரங்கள். சத்தியத்தில் உறுதியும் நற்குணங்களுமே இரதத்தின் பாதுகாப்பிற்கும் வெற்றிக்குமான கொடிகள். இரதத்தின் நான்கு குதிரைகள் - பலம், சரி பிழையைத்தீர்மானிக்கும் விவேகம் (Discrimination), புலன் அடக்கம், பிறர்நலம்பேணல் ஆகியவைகளே.

முதலாவது குதிரை:- பலம் - ஆசையும், பற்றும் இல்லாதிருக்கும் போதுதான் பலம் உண்மையானதாக இருக்கும். எம்மிடம் இல்லாத ஒன்றை விரும்பும் போது அது ஆசை எனப்படும். எம்மிடம் உள்ள ஒன்றை விரும்பும் போது பற்று எனப்படும்.

இரண்டாவது குதிரை:- விவேகம் - எது சரி எது பிழை, எது உண்மை எது பொய், எது எனது கடமை எது எனது கடமை அன்று என அறியும் ஆற்றல்.

மூன்றாவது குதிரை:- புலன் அடக்கம் - புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் தேவையைத் தெரிந்து பயன்படுத்துதல்.

நான்காவது குதிரை:- பிறர்நலம் பேணல் - மற்றவர்களின் நலத்தை உத்தேசித்துக் காரியம் ஆற்றவேண்டும். சுயநலம் கூடாது.

இந்தநான்கு குதிரைகள் சரியாக இருந்தாலும் கடிவாளக் கயிறு சரியாக இருக்கவேண்டும்.

முதலாவது கயிறு - மன்னிக்கும் தன்மை

பணமில்லாத மனிதன் அம்பில்லாத வில்.

இரண்டாவது கயிறு - இரக்கம்
மூன்றாவது கயிறு - மனச்சமநிலை

## சாரதி

ஒரு புத்திசாலியான சாரதிக்கு அழகு - கடவுள் பக்தி
கேடயம் - சாந்தம்
வாள் - திருப்தி
கோடரி - தர்மம்
கணை - புரிந்துணர்வு
வில்லு - தன்னை அறிதல்
அம்பறாத்தூணி - தூய்மையும், துணிவும் கொண்ட மனம்.
அம்புகள் - மன அமைதி
கவசங்கள் - ஜப, நியமங்கள், குருவிற்கும், கற்றறிந்தோர்க்கும் மரியாதை உடைக்க முடியாத கவசங்கள்.

நண்பனே! இந்தத்தேரை வைத்திருப்பவனுக்கு எதிரிகள் எவரும் இல்லை. அவன்தான் பெரியவீரன். சம்சாரம் என்ற எதிரியை வெற்றி கொள்ளக்கூடியவன்.

இந்த அறிவுரைகளைக் கேட்டதும் விபீஷணன் இராமருடைய மலர்ப்பாதங்களில் வீழ்ந்து வணங்கிப், பின்வருமாறு கூறினான். "தர்மத்தேரை வர்ணிப்பதன் மூலம் எனது வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கி விட்டீர்களே" என்றுகூறி மீண்டும், மீண்டும் வீழ்ந்து வணங்கினான்.

இராவணன் இறந்ததும் விபீஷணன் அடுத்த அரசனாவான் என்று இராமரால் கூறப்பட்டது. ஆகவே, அடுத்த அரசனைத் தயார்ப்படுத்தும் போதனையாகவும் இது அமைந்துள்ளது.

இப்போதனைகள் விபீஷணனுக்கு மட்டுமல்ல. எங்கள் எல்லோருக்கும் தாம்.

உன் எண்ணத்திற்கும் பேச்சிற்கும் ஒற்றுமை இருக்கட்டும். இதுதான் சரியான ஆன்மிக சாதனை. 'உலகமே உன்னுடைய எல்லாப் பொருளும்' என்று நீ உன் மனதில் உறுதியாக நினைக்கும்போது, "பகவானே! நீயே என்பொருள் எல்லாமும்" என்று வாயால் மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாயானால், உன்னுடைய எல்லா ஆன்மிக சாதனைகளும் பயனற்றுப் போகும்.

ஊசியின் காதில் நூலைக் கோக்கும் போது நூலின் முனை கொஞ்சம் பிரிந்திருந்தாலும், கோக்க முடியாது. அதுபோல், ஒருவனிடம் உலக ஆசை சிறிது இருந்தாலும்கூட அவன் முக்தி அடையமுடியாது. மனம் உலக ஆசைகளால் அலைக்கழிக்கப்படாமல் தூய்மையாக இருந்தால்த்தான் ஒருவன் பரம்பொருளை அறியமுடியும்.

*-ஸ்ரீ இராமகிருஷ்ணர்-*

**துன்பம் எமது கண்களைத் திறக்கும் துணை.**

உ

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

## [மகாபாரதத்திலிருந்து]

# அர்ச்சுனன் உளந்தெளிதல்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள்.

துவாரகையை அடைந்த அர்ச்சுனனைக் கண்ட உருக்குமணி முதலான ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் தேவியரும் மற்றும் உள்ள எல்லோரும் கிருஷ்ணரதும் பலராமரினதும் நிலையை விசாரித்தனர். தனது உள்ளத் துயரை எல்லாம் உள்வாங்கிக் கொண்ட அர்ச்சுனன், இருவரும் வனத்திலே தவவாழ்வை மேற்கொண்டுள்ளனர் என்று எடுத்துரைத்துவிட்டுக் கடல்கோள் நடக்கவிருக்கும் தினத்துக்கு முன்பாக எல்லோரும் இந்திரப்பிரஸ்தத்தை அடையவேண்டும். அதற்கு ஆவன செய்யுங்கள் என்று உரைக்கலானான். எல்லோரையும் நகரை விட்டு வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடலானான். மக்களும், அரசகுலத்தவரும் தம் சொத்துக்கள் உடைமைகள் என்பனவற்றை எல்லாம் எடுத்து, வாகனங்கள், வண்டிகள், குதிரை முதலானவற்றில் ஏற்றி வெளிப்போந்தனர். எல்லோரையும் அழைத்துக் கொண்ட அர்ச்சுனன் தானும் தனது இரதத்திலேறி துவாரகை நகரை விட்டுக் கிளம்பலானான். நகரை விட்டு வெளியேறிச் சிலகாததூரம் சென்றதும் பேரலைகள் எழுந்து கடல் கொந்தளித்துத் துவாரகை நகரை மூழ்கடித்தது. இது தெய்வசித்தம் என்று உணர்ந்து எல்லோரும் துயரமுற்றவர்களாய் மேலும் வழி நடந்தனர். மாலை வேளை நெருங்கியமையால் அவர்கள் எல்லோரும் வனமொன்றில் தங்கலாயினர்.

மக்கள் கூட்டத்தைக் கண்ட அவ்வனத்து வேடர்கள் ஆயுதங்களுடன் வந்து கொள்ளையிடமுனைந்தனர். இதனைக் கண்டு கொண்ட அர்ச்சுனன் தனது அம்பை எடுத்துக் கொண்டு போரிடமுனைந்தான். அம்புகளைத் தடுத்துச் செயலற்றதாக்கினர் வேடர்கள். இதனாற் கோபமடைந்த அர்ச்சுனன் தனது காண்டீபத்தை எடுத்துப் போரிட்டான். அப்பெரும் வில்லை அவனாற் கையாளமுடியாத நிலை ஏற்பட்டது. கன்னனைக் கொன்ற காண்டீபம் செயலற்றுப் போனதை உணர்ந்து கொண்ட அர்ச்சுனன் மிகவும் மனச்சோர்வும் கவலையும் அடைந்தவனாய்ச் சிந்தித்து செயற்படத் தொடங்கினான். போர் செய்வதனை நிறுத்தி வேடர்களை அணுகி "இவர்கள் கண்ணபிரானின் தேவியரும் இனசனங்களும் இவர்களிடம் நீங்கள் கொள்ளையடிக்கக்கூடாது." என்றுமிகவும் நயமாக எடுத்துரைத்து அவர்களுக்குச் சிலபொருள் பண்டங்களைக் கொடுத்துத் திருப்பி அனுப்பி வைத்தான்.

மறுநாள் எல்லோரும் பயணத்தை மேற்கொண்டு இந்திரப் பிரஸ்த நகரை அடைந்தனர். அங்கு கிருஷ்ண

பகவானின் பேரன் முறையில் உள்ள வச்சிரதேவனுக்குப் பட்டம் சூட்டி, அழிந்து போன துவாரகையை விடமீத மிருக்கும் நாட்டை அரசோச்சும்படி பணித் தான். இதற்குச் சில தினங்களின் பின் ருக்மணி முதலானோருக்குக் கண்ணபிரானின் நிலையை எடுத்துக் கூறலானான். அப்பெண்கள் எல்லோரும் வருத்தமுற்றவராய் அழுது புலம்பலாயி னர். பின்னர் அவர்கள் தம் வாழ்வை முடித்துக்கொள்ளத் தீர்மானித்துப் பெரும் கட்டைகளைக் கொண்டு தீ மூட்டப் பணித்து அதிலே சங்கமமாயினர். இதன் பின்னர் இறந்த பெண்மணிகள் எல் லோருக்கும் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலானவற்றை வச்சிரதேவனைக் கொண்டு செய்வித்த அர்ச்சுனன் அஸ்தினாபுரிக்குத் திரும்பி வரும்பொ ருட்டு எல்லோரிடமும் விடைபெற்றான்.

மனம் சஞ்சல மடைந்தவனாய் அஸ்தினாபுரிக்குத் திரும்பிய அர்ச்சுனன் முதலில் வியாசமகரிஷியைத் தரிசிக்க விரும்பலானான். வேதவியாசர் இருக்கும் ஆச்சிரமத்தை அடைந்த அர்ச்சுனன் தாய்ப்பசுவைப் பிரிந்திருந்த பசுக்கன்று அடிபட்டுப் பின் தாயைக் கண்டு கொண் டது போன்று பெருங்கவலையுடன் அழுதவனாய் அவரை சாஷ்டாங்கமாகப் பணிந்தான். அர்ச்சுனனின் நிலையைக் கண்டுகொண்ட வியாசமுனிவர், அர்ச்சு னனை ஆசீர்வதித்து இருக்கையொன்றில் அமரச்செய்து அவனை ஆசுவாசப்படுத் தலானார். பின்னர் அர்ச்சுனனை நோக்கி "விஜயா, நீ தனியே என்னைக் காண வந்த காரணம் யாது? உற்ற துணை யாகிய உயிர்த் தோழனை இழந்து தவிக்கிறாயா? வேடர்களால் அவமானப் பட்டு வெட்கப்படுகிறாயா? நடந்தவற்றை எடுத்தியம்பு" என்று திரிகாலமுணர்ந்த ஞானியாகிய வியாசர் வினாவலானார். முனிசிரேஷ்டரின் வினாக்களினால் மேலும் மனமொடிந்த அர்ச்சுனன் நடந்து முடிந்த விடயங்கள் அனைத்தையும் எடுத்துக்கூறி, "குரு நாதரே எனது காண்டீபம் செயலிழந்து, என்னாற் போரிடமுடியாது போனது ஏன்? யாதவகுலம் ஏன் அழிந்துபட்டது? என் றெல்லாம் வினாவினான். வீராதிவீரனும் வில்லுக்கு விஜயன் என்று பெயர்பெற்ற வனுமாகிய அர்ச்சுனன் இவ்வாறு கலங்கித்தவிப்பதனைக் கண்ணுற்ற வேதவியாசர் "அப்பனே விஜயா? தூய்மையான ஞானியரின் மனத்தைப் புண்படுத்தி அவர்களை அவமதித்த மையால் யாதவகுலம் அழிவுபட்டது. ஆதிமூலப் பரம்பொருளாகிய ஸ்ரீமத் நாராயணன் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டிப் பூபாரம் தீர்க்கவே மானுட உருக்கொண்டு கண்ணனாகப் பூவுலகில் அவதரித்தார். அந்த மேலான பரம்பொருள் தனது அவதார நோக்கத்தை நிறைவேற்றியதும் தனது உடலை விட்டுச் சென்று வைகுந்தத்தில் வாசஞ்செய்கிறார். உடல் அழியும் தன்மையானது. அழிந்து விட்டது. இதிலே கவலைப்படுவதற்கு ஏதும் இல்லை. பாரதப் போரில் வெற்றிவாகை சூடிய உனது வீரதீரம் எல்லாம் கண்ண பிரானின் பெரும் கிருபையாற் கிடைத்தவை. பரம்பொரு ளாகிய கண்ணன் உனது பக்கத் துணையாக இருந்தபோதுதான் உன் னால் வெற்றி பெறமுடிந்தது. கண்ணனை நீ நண்பனாய், உறவினனாய், எல்லா

**சினம்போன்ற பகைவர் இவ்வுலகில் இல்லை.**

வற்றிலும் மேலாகக் குருவாகவும் ஏற்றுக் கொண்டவன். கண்ணன் உடனிருந்து உன்னை வழி நடத்தியமையால் நீ பேரும் புகழும் பெற்றாய். கண்ணன் உன்னை விட்டு நீங்கியதும் உன்னாற் செயற்படமுடியவில்லை. கண்ணனின் சகாயத்தை நீ இதன் மூலம் உணர்ந்து கொள். கண்ணபிரானுடன் நீ இருந்த போது உனது முகத்தில் ஓர் ஒளி நிறைந்திருந்தது. இப்பொழுது உனது முகக்களையே மாறிவிட்டது. இதன் கார ணத்தை நீ உணர்ந்து கொள்வாயாக. இனி நீங்கள் ஐவரும் ஐம்புலன்களை அடக்கி வடதிசை நோக்கி யாத்திரை செய்வதுதான் உசிதமானது." என்று எடுத்துரைத்தார். சற்குருவாகிய வியாச மகரிஷி உரைத்தவற்றைச் செவிமடுத்த அர்ச்சுனன் குருவின் பொன்மொழிகளை உணர்ந்து கொண்டு மனச்சஞ்சலம் அகன்றவனாய்த் தெளிந்த சிந்தையுடன் தான் இனிச் செயலாற்ற வேண்டிய முறைகளை மனத்திற் கொண்டவனாய் முனிசிரேஷ்டரிடம் விடைபெற்று அஸ்தி னாபுரம் அடைந்தான்.

## தருமரின் மனக்கவலை

அஸ்தினாபுரியை அடைந்த அர்ச்சுனன் தருமரை அணுகி நமஸ் கரித்து நடந்து முடிந்த விடயங்களை எடுத்துரைத்தான். கண்ணபிரானின் தேக நீக்கத்தைச் செவியுற்ற தருமர் சிம்மா சனத்திலிருந்து மயங்கியவராய் நிலத் தின் மீது விழுந்து புலம்பலானார். அரு கிருந்த மற்றவர்களும் புலம்பியழுதனர். அரசவையெங்கும் சோகமயமாய் இருக்க அந்தப்புரத்திற்கும் செய்தி பரவி யது. கண்ணபிரானின் செய்தியறிந்த பாஞ்சாலி முதலிய பெண்மணிகள் எல்லோரும் பெருங்குரலெடுத்துக் கதற லாயினர்.

மயக்கம் தெளிந்து எழுந்த தருமர் ஆதியில் இருந்து கண்ணபிரான் தமக்கு செய்துவந்த உதவிகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக எடுத் துரைத்துக் கதறலானார். கண்ண பிரானின் பெருமைகளையும் வீரதீரச் செயல்களையும் நினைத்து மனம் குமுற லானார். நினைந்து நினைந்து அறி விழந்து சோர்ந்து வீழ்ந்தார். இவ்வாறு புலம்பித் தவித்த தருமரையும் மற்றைச் சகோதரர்களையும் எவ்வாறு தேற்றுவது என்று புரியாமல் எல்லோரும் தவித்தனர். தத்தளித்துத் தவித்த பாண்டவர்கள் ஒருவாறு சில நாட்களின் பின் தெளிவடைந்தனர். இந்நிலையில் தருமர் இனியாது செய்யவேண்டும் என்று சிந்தித்து ஒரு முடிபுக்கு வந்தவராய்த் தமது சகோதரர்களை அந்தரங்கமாகச் சந்தித்து பேசிச் செயற்பட முனைந்தார். அதன் வண்ணம் ஓர் தனியறையில் பாண்டவர் ஐவரும் ஒன்றுகூடினர்.

இன்றைய தொடரில் தெய்வத் துணையின் மேன்மையை வியாசமகரிஷி அர்ச்சுனனுக்கு எடுத்துரைத்த பகுதியை நாம் எமது உள்ளத்திற் பதித்துக் கொள்ளவேண்டும். திருவருட்டுணை என்பது எம்மை எவ்வாறு வழி நடத்து கிறது என்பதனை எல்லோரும் புரிந்து கொள்வதில்லை. எல்லோராலும் அதனைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

மற்றவர்களை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சியடைவாய்.

தெய்வத்திருவருள் எம்பக்கம் இருக்கும் வரை எம்மால் எதனையும் எளிதிற் சாதித்துவிடமுடியும். நாம் திருவருளை மறந்து அதனைப் புறக்கணித்து நடப்போமானால் நாமே எமது வீழ்ச்சிக்கு வித்திட்டவராவோம். எனவே வியாச மகரிஷியின் கூற்றுக்களை எமது வாழ்வின் அத்திவாரமாகக் கொண்டு எமக்கு வழிகாட்டவல்ல வாழும் சற்குரு ஒருவரை எமது வாழ்நாளில் தேடிக் கண்டுபிடித்து அச்சற் குருவின் பாதச் சுவடுகளைப் பின்பற்றி எமது வாழ்வை உயர்த்துவோம். நிறைவாக்க முயலுவோம். ஆனந்தம் அடைவோம்.

(தொடரும்...

மோட்ச உலகத்தை அடையவிரும்புபவன் எந்தக் காரணத்தைக் கொண்டும் பெண், பொன் முதலியவற்றின் மீது பற்றுக் கொண்டிருக்கக் கூடாது. சிறிது பற்று இருந்தால்கூட ஒருவர் முக்தர் ஆக முடியாது. ஒரு வாணலியில் மணலுடன் சேர்த்து நெல்லைப் பொரிக்கும் போது, பொரிந்து வாணலியை விட்டுத் துள்ளிவிழும் நெற்பொரிகளில் நெருப்புக்கறை சிறிதும் இருக்காது. வாணலியில் இருக்கும் மற்றப் பொரிகள் சூடான மணலினால், எங்கேயாவது தீய்க்கப்பட்டிருக்கும்.

(செல்வம், புகழ், பிள்ளைப்பேறு முதலிய) அற்பமான ஆசைகளை விரும்பி ஒருவரும் ஆன்மிக சாதனைகளை மேற்கொள்ளக் கூடாது. இறைவனையே நாடுபவனின் விருப்பம் மட்டுமே நிறைவேறுகிறது.

எப்படி ஒரு பொருளின் நிழல் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட நீரில் தெரியாதோ அதுபோல், ஆசை என்னும் காற்றினால் அசைக்கப்பட்ட மனமாகிய ஏரியில் இறைவனின் உருவம் தோன்றாது. மனிதன் மூச்சு விடும்போது கூட மனதில் அசைவு ஏற்படுகிறது. ஆகவேதான் யோகிகள் கடவுளைப் பற்றித்தியானம் செய்வதற்கு முன்பு மூச்சை அடக்குவதில் தங்கள் முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள்.

தன் எண்ணங்களை மறைக்காதவன் தான் மோட்ச உலகத்திற்குள் நுழைகிறான். அதாவது, கபடமற்ற தன்மையும், முழு நம்பிக்கையுமே அந்த உலகத்திற்கு அழைத்துச் செல்லும் பாதைகளாகும்.

பாம்பு எதிர்படும்போது, "மானசதேவியே (பாம்புகளின் அதி தேவதை) உன் திருமுகத்தை மறைத்து வாலை மட்டும் காட்ட வேண்டுகிறேன்" என்று மக்கள் சொல்வது வழக்கம். அது போல, மங்கைப் பருவமடைந்த பெண் ஒருத்தியைச் சந்திக்கும்போது, நீ அவளை வணங்கி, "அம்மா!" என்று அழைத்து, அவள் முகத்தைப் பார்க்காமல் திருவடிகளையே பார்க்கவேண்டும். அப்படி நீ செய்தால் காமவலைக்குள் விழ மாட்டாய்.

*-ஸ்ரீ இராமகிருஷ்ணர்-*

**குறைவாகப் பேசி நிறைய வாசித்தறி.**

# யார் இந்த (ச்) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

## ஸ்ரீசச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

## குருநாதரின் சமாதியின் பின்பு

## புதிய தொண்டரின் வருகை

இவ்வாறு சிந்தனைவயப்பட்டவராக இவர் ஆச்சிரமத்திற்குச் சென்று அம்மையாரைச் சந்தித்தார். சந்தித்தவருக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது, ஆம் அம்மையார் 1000 ரூபாவினை அவரிடம் கொடுத்து ஆச்சிரம வளவின் ஓரத்திற் கட்டப்பட்டிருந்த கடையில் மறுதினம் (19ம் திகதி) 4 மணிக்கு வியாபாரத்தை ஆரம்பிக்குமாறு கூறினார். இது அவர் முற்றிலும் எதிர்பாராத ஒன்று. இது குறித்து அவர் மகிழ்வடைந்த போதும் தன்னிடம் கையில் ஏழாயிரம் ரூபாவே இருப்பதாகவும் இது வியாபாரம் ஆரம்பிக்கப்போதாதே எனவும் அம்மையாரிடம் கூறினார். அம்மையாரோ பரவாயில்லை வியாபாரத்தைத் தொடங்கு பின்பு பார்ப்போம் என்று கூறினார். அவரும் சம்மதித்தார். அம்மையாருக்கு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுக்கும் உளமார நன்றி கூறி விடைபெற்றார். கடையும் குறித்த திகதியில் ஆரம்பிக்கப்பட்டது. திருவருளின் துணையினால் பல நல்லன்பர்கள் அவருக்கு வியாபாரத்தில் உதவினர். வியாபாரமும் படிப்படியாக மேம்படடையலாயிற்று. ஆச்சிரமச் சூழலில் அவரின் வியாபாரத் தலம் இருந்த காரணத்தால் அவர் அதிக நேரம் ஆச்சிரமச் சூழலில் இருக்கமுடிந்தது. இதுவே அவரைப் படிப்படியாக ஆச்சிரமத்துடன் பின்னிப்பிணையச் செய்தது. இது ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் திருவருள் விளையாட்டென்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாறு ஆச்சிரமத்துடன் தொடர்புபட்டவர், அம்மையாருடன் தினமும் உரையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டார். அம்மையாரின் அறிவுரைகளையும் செவிமடுப்பார். அவருக்கு படிப்படியாக ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் மீது அன்பும் பக்தியும் தோன்றவாரம்பித்தன. அம்மையாரிடமும் அன்பு காட்டினார். ஆச்சிரமப்பணிகளில் தன்னையும் ஈடுபடுத்திக்கொள்ள ஆரம்பித்தார். இவரின் பணிகள் பற்றிய மேலதிக விபரங்களை இனித்தொடரும் இவ்வரலாற்றிற் காணலாம்.

இதனிடையே புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிறந்த ஞானியுமாகிய திருப்புகழ்ச் சுவாமி அவர்கள் 1983ம் ஆண்டுப் பகுதியில் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் வந்து தங்கியிருந்தார். இவர் திருப்புகழ்ப் பாடல்களுக்கு உயர் அத்வைதக் கருத்துகளுடன் விளக்கமளிப்பார். மிகுந்த அறிவும் ஞானமும் உடையவர். இதனால் மக்கள் இவரைத் திருப்புகழ்ச் சுவாமி என்றே அழைத்து வரலாயினர். இவரைப் பற்றி அம்மையார் கூறும் போது தாம் இவரை ஓர் குழந்தை போன்றே

கண்டதாகக் கூறுவார். ஆம் மனத்தின் கண்மாசிலன் ஆதலால் அவர் ஓர் ஞானக்குழந்தையாகவே இருந்தார். இவ்வாறு இங்கு தங்கி இருந்த திருப்புகழ்ச் சுவாமியவர்கள் சில காலங்கள் அங்கிருந்துவிட்டுச் சென்றார். பின்பு 1985ம் ஆண்டில் அவர் உடல் நோய்வாய்ப்பட்டது. அப்போது அவர் மீண்டும் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் வந்து தங்கி இருந்தார். அம்மையார் அவரை மிகவும் பக்குவமாகத் தாய் பிள்ளையைப் பார்த்துக்கொள்வது போலப் பார்த்துக் கொண்டார். இங்கு ஓர் முக்கியமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும்.

முன்னதாகவே திருப்புகழ்ச் சுவாமிகள் தமது சமாதியின் அடக்கத்திற்கென ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் சமாதிக்கான கிடங்கு ஒன்றை வெட்டி உரிய முறைப்படி கட்டி வைத்திருந்தார். 1985ம் ஆண்டுப்பகுதியில் அவர் அங்கு சுகவீனமுற்றுத் தங்கியிருந்தார் என மேலே கண்டோம் அல்லவா! அவர் உள்ளத்தில் என்ன தோன்றியதோ, தமக்கென அமைக்கப்பட்ட சமாதி இடத்தை அம்மையாருக்கு வழங்குவதாகக் கூறினார். "அம்மா இந்தக் கிடங்கு உனக்குத்தான்" என்று கூறிவிட்டுச் சில நாட்களில் அங்கிருந்து சென்றுவிட்டார். இச்சம்பவம் குறித்து நாம் எத்தகைய விளக்கத்தைத் தான் கூறமுடியும்! அம்மையாரின் தவப்பெருமையை உலகிற்குக் காட்ட திருவருள் வழி ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் செயலே இதுவென நாம் கொள்ளலாம். "உனக்கு ஆக வேண்டிய தெல்லாம் சுவாமி தரும், நீ ஒன்றுக்கும் யோசியாமல் இறைவனிடத்தில் உள்ளத்தை வைத்திரு" என ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள் தமது சமாதி காலத்தில் அம்மையாரிற்கு உரைத்தது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.

இக்காலப்பகுதியிலும் சுவாமிகளின் சமாதிதினமான தைப்புனர்பூசத்தன்று ஆச்சிரமத்தில் விசேடபூசைகளும், இணுவிலிலுள்ள சுவாமிகளின் சமாதியிலும் விசேட பூசைகளும் இடம்பெறுவதுடன் ஆச்சிரமத்தில் பலநூறு அடியவர்களுக்கு மாகேசுர பூசையும் நடைபெற்று வந்தது. ஒவ்வொரு வருடமும் நிகழும் இக்குருபூசையின் பொருட்டு அம்மையார் மிகவும் உற்சாகத்துடன் செயலாற்றுவார். அத்துடன் பல அன்பர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டுழைத்து வந்தனர். இவர்களுள் முக்கியமாக அன்பர் ஸ்ரீமான் குழந்தை வடிவேலுவும் குறிப்பிடத்தக்கவர். இவர் தான் பிற்காலத்தில் ஆச்சிரமத்தின் சேவையை விரிவுபடுத்துவதில் முயற்சியுடன் செயலாற்றி உழைத்தவர். இது தொடர்பான மேல் விபரங்களை நாம் பின்பு காணலாம்.

## எதற்காக புற்றுநோய்?

புற்றுநோய் கண்டவர்கள் தப்பிப் பிழைப்பது முடியாது என்பது பொதுவான நிலை இருப்பினும் புற்றுநோயாற் பாதிக்கப்பட்ட அம்மையாரோ அதன் தாக்கத்திினின்றும் முற்றும் விடுபட்டவர் என்பது வியத்தகு உண்மையாகும். இது தொடர்பான நிகழ்வுகளை இனிக் காண்போம்.

அம்மையாரின் தவவாழ்வின் பாதுகாவலராக இருந்து வந்தவர்,

திருப்தி இல்லாத பிட்சைக்காரன் ஆசையுள்ளவன்.

சுப்பிரமணிய சுவாமிகள் என முன்பு கண்டோம். அம்மையார் சுப்பிரமணிய சுவாமிகளைத் தமது குழந்தை போன்றே பாராட்டி வந்தார். சுப்பிரமணிய சுவாமி கள் இல்லறத்தவராய் இருந்தபோதும் சுவாமியின் பொருட்டு அவர் ஆற்றிவந்த பணிகளின் திறத்தால் அம்மையார் அவர் மீது அதிக அன்பு பாராட்டி வந்தார். இத்தகைய சுப்பிரமணிய சுவாமிகளுக்கு 1988ம் ஆண்டில் புற்றுநோய் அறிகுறிகள் தோன்றவாரம்பித்தன. பல்வேறு சிகிச்சை களும் பயனளிக்காத காரணத்தாலும் நோய் சிறிது அதிகரித்த காரணத்தாலும் அவர் மஹரகமவிலுள்ள புற்றுநோய் வைத்திய சாலைக்குச் செல்லவேண்டிய தாயிற்று. அவர் அவ்வைத்திய சாலை யில் தங்கியிருந்தே சிகிச்சைபெற்று வந்தார்.

சுப்பிரமணியம் சுவாமிகளுக்குப் புற்றுநோய் வந்ததையிட்டும், அவர் அதனால் வேதனைப்படுவதையும் கண்ட அம்மையாருக்கு மிகவும் கவலை யுண்டாயிற்று, தம் அன்புக்குழந்தைக்கு இந்நோய் வந்ததே என அவர் உளம் உருகியது. வைத்தியசாலையில் அவன் மணியம் (அம்மையார் சுப்பிரமணிய சுவாமிகளை அன்புடன் இப்படியே அழைப்பார்) எப்படி அவதிப்படுகிறானோ? எனக் கூறிக் கொண்டிருப்பார்.

திருவருளின் விளையாட்டை என்னென்பது! அம்மையார் சுப்பிரமணிய சுவாமிகளின் புற்றுநோய் பற்றிக் கவலை யுற்றிருக்க, அவருக்கே அப்புற்றுநோய் வந்துவிட்டது. ஆம் 1988ம் ஆண்டிலே அம்மையாரும் புற்றுநோயினால் தாக் குண்டார். அம்மையாரையும் நோய் அதிகம் வாட்டியது. ஈற்றில் அவரும் சிகிச்சைக்காக மஹரகம வைத்திய சாலையிற் சேர்க்கப்பட்டார். தம் அன்பிற் குரிய மகன் மணியத்தையும் அவர் அங்கு காணக்கூடியதாக இருந்தது. தாம் மகன் மணியத்தை காணவேண் டும் என்பதாலேயே தமக்குப் புற்றுநோய் வந்தது போலும் என அவர் சிரிப்புடன் பிற்காலத்தில் இதனை நினைவு கூர்வார்.

சுமார் இரண்டு மாதகாலச் சிகிச் சையின் பின் சுப்பிரமணிய சுவாமிகள் வைத்தியசாலையை விட்டு நீங்கினார். அதன்பின் ஒருமாதகால சிகிச்சையைப் பெற்ற அம்மையாரும் வைத்திய சாலையை விட்டு நீங்கினார். சுப்பிர மணிய சுவாமிகளின் நோய் குணமாகாத நிலையில் இருந்த போதும் அம்மையார் சிறிது காலத்தில் புற்றுநோய் முற்றிலும் நீங்கப் பெற்றவரானார் இது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது திருவருளின் செயலை அளக்க எவரால் தான் முடியும். இந்நிலையில் ஓர் கேள்வி எழுகிறது. இறைவனையே ஆதாரமாகக் கொண்டு ஆன்மீக நெறியில் நிற்பவர் களுக்கு இக்கொடிய புற்றுநோய் எவ்வாறு வரலாம்? என்பதே இக்கேள்வி யாகும். இதற்கு பல்வேறு நுட்பகாரணங் கள் இருக்கின்றனவாயினும், மெய்யான விளக்கமொன்றை இங்கு கூறமுடியும்.

அதாவது, பலர் நினைப்பது போன்று ஆன்மீகம் என்பது உடல்சார்ந்த ஒன்றன்று. உடல் என்பது பௌதிகக் கூறு. அதற்கு எப்படி உருவாக்கமும் (பிறப்பு) மறைவும் (இறப்பு) உண்டோ அவ்வண்ணமே நோய்களும் கடும் உபாதைகளும் உண்டு. அஞ்ஞானிகள் இவற்றைக்கண்டு கலக்கமடைகின்றனர்.

(தொடரும்....

மிகவும் பலவீனம் உள்ளவன் முற்கோபக்காரன்.

உ

# சந்நிதிச் சண்முகனும்

## ஆச்சிரமப் பெரும்பணியும்

**முதுபெரும்புலவர் வை. க. சிற்றம்பலவனார் அவர்கள்.**

ஆற்றுடனே கொன்றைமதி, அரன்கண்ணிற் பொறியாகிக்
கூறுசர வணம் மூழ்கிக், குமரராறு வருமாகி
மாறில்கார்த் திகைமாதர் மடிதவழ்ந்து பாலயின்று
ஈறில்அன்னை அணைக்கக் கந்த னாகிய சந்நிதியான்

அண்டர்களின் சிறைநீக்கி, அரசோச்ச வைத்தவனை
தண்டையொடு சிலம்பணிந்து தனதடியார் துயர்துடைக்க
தொண்டைமா னாற்றயலிற் கோயில் கொண்டு வீற்றிருக்கும்
வண்டமிழி னினியானை, வாயார வாழ்த்துதுமே

ஒருபாலி லலைகடலே ஒப்பில்நெய்தல் நிலங்காட்ட
ஒருபாலில் தடவயல்கள் உயர்மருத நிலங்காட்ட
ஒருபாலில் மலர்ச்சோலை, உன்னதமுல்லையைக் காட்ட
ஒருபாலிற் கோயில் கொண்ட உயர் முருகன் பதம் தொழுவாம்

தெங்குதரு மிளநீரில், தெய்வப்பசு தரும்பாலில்
தங்குநறுந் தேன்,கரும்பில், தனிவாசப் பொடிகலந்து
பொங்குநிறை குடகும்பம் பூசுரர்மஞ் சனமாட்டிச்
செங்கையில் தீ பங்காட்டச் செல்வன்சந் நிதிதிகழ்வோன்.

மும்மலங்க ளாய்நின்ற முப்பெரிய அசுரர் களை
அம்மலங்களுடன்வாட்டி அழித்தவைவே லாறுமுகன்
செம்மையுடன் பொலிநகராம் செல்வச்சந் நிதியமர்வோன்
தம்மையடைந் தார்க் கருள்வான் சார்ந்தவனின் சரணடைவீர்.

ஆசென்ப சிறிதுமிலா அகத்தினராய் அதிசிறந்த
பூசுதிரு நீறணைய புனிதர்களே, சந்நிதியில்
ஈசனுமாய்ச் சிவகுருவாய் இருந்தானை இனிதேத்தின்
நேசனுமாம் அவனிடத்தில் நினைத்தவெலாம் பெறுவீரே.

அவனருளே கண்ணாக அன்றமர ரருள்பெற்றார்
அவனருளால் மயில்சேவ லாய்ச்சூரன் கதியடைந்தான்

அவன்தேவர் பூசையுடன் குஞ்சரியை யுமேற்றான்
அவனைவள்ளி கலந்துய்ந்தாள், அவனேசந்நிதியானே.

அன்றையநல் லற்புதங்க ளின்றில்லை யானாலும்
குன்றுதோ றாடுகின்ற குகநாடுஞ் சந்நிதியில்
இன்றுமே யன்றவனா லியற்றியநல் லன்னதானம்
நன்றா யாச்சிரமம் நடக்கவருள் செய்கின்றான்.

சந்நிதியா னாச்சிரமம் தனிநம்பி வாழ்முதியோர்
எந்நிதியு மில்லாதோர் இரங்கியங்கே பணம் பெறுவோர்
பொன்னனைய பள்ளிச்சிறார் புரிபிணிக்கு மருந்தெடுப்போர்
இன்னவர்கள் யாவர்க்கும் இரங்கிடுமவ் வாச்சிரமம்

அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருட்பணிசெய் யாச்சிரமம்
கற்றார்க்கும் செல்வருக்கும் கனிந்துபடிப் பவருக்கும்
உற்றஉளப் பசிதீர்க்க உயர் ஞானச்சுடர் மலரை
வற்றாது வழங்கிவரும் வளமுடனே வாழியவே.



உயர்திரு மயில்வாகனசுவாமி அவர்களின் 20ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வின்போது ஆச்சிரமத்தினாற் சத்துணவு வழங்கப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கு ஊக்குவிப்புப் பரிசுகள் வழங்கிய நிகழ்வு.

நடக்க முடியாதது என்று இந்த உலகில் எதுவுமில்லை.

உ

# ஆட்கொண்டபோது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்.

இற்றைக்கு சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றி, 1452 அருட்பாடல்களைப் பாடி, எமக்கு வழி காட்டியவர் தாயுமானவர். பாரதநாட்டில், வேதாரணியத்தில், கேடிலியப்பபிள்ளை என்பவருக்கு இவர் அருந்தவப் புதல்வனாக வந்துதித்தார். இறைவனின் அருளினாலே தோன்றிய இவர் இறைவனது அருட்கடாட்சம் பெற்றவராக விளங்கினார்.

திருமூலர் பரம்பரையிலே வந்த மௌனகுரு இவரது குருநாதர் என்று கூறுவர். இவர் விருத்தங்கள், கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள், வெண்பாக்கள், கண்ணிகள் எனப் பலவகைப்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

இறைவனால் ஆட்கொள்ளப்படும் போது ஏற்படும் நிலையை விவரித்துக் கூறும் இவரது ஒருபாடலை மட்டும் இங்கெடுத்து நோக்குவோம்.

சிற்சபையிலே நடராஜப்பெருமான் நர்த்தனம் செய்கின்றார். இந்த அண்டசராசரங்களின் இயக்கமே அந்த நடனத்திலே தான் தங்கி இருக்கின்றது. எனவே அத்தகையச் சிற்சபையை சாதாரணமாகக் கருத முடியுமா? அங்கே நடைபெறும் நடனம் ஆனந்த நடனம். அப்படி நர்த்தனமாடுபவன் கருணை செய்யும் இறைவன். அன்பர்களுடைய கடல்மடை திறந்ததொத்த அன்புக்கு எளியவனான அவன் கருணாகரனாக இருந்ததாலேதான் கல் நெஞ்சமானவர்க்கு எளியை ஆகக் கிட்டினான்.

அதாவது இறைவனது அருள் கிட்டி ஆட்கொள்ளப்பட்டவர் எப்படியிருக்கின்றார் தெரியுமா? அன்னம் குழைந்ததை நாம் பார்த்திருக்கிறோம். கனிந்த கனிகளைக் குழைத்திருக்கிறோம். ஆனால் இங்கு என்ன குழைகிறது தெரியுமா? உடல் குழைகிறது. என்புகள் முழுவதும் நெகிழ்ந்துருகுகின்றன. கண்ணீர் ஊற்றெடுக்கிறது.

ஊசிகாந்தத்தில் போய் ஒட்டிக் கொள்ளுமே அப்படி இவர் இறைவனிடம் இணையும் ஒருறவு ஏற்படுகிறது. நினைக்க நினைக்க நெஞ்சம் படபடவென்று உள்ளே நடுங்குகிறது. அவர் இறைவனைப் போற்றிப் பாடுகின்றார். ஆடுகின்றார். அந்த ஆனந்த நிலையிலே குதிக்கின்றார். ஆனந்த மிகுதியால் முகத்திலே புன்னகை விரிகிறது. அந்தப் புன்னகை குளிர்மையும் அழகும் ஒளியும் கொண்டதாக நிலவுபோலிருக்கிறது. முகையவிழும் மலர்போன்ற கைகளை விரித்துக் கும்பிட்டு "வானே, வானிலின்ப மழையே, மழைத்தாரை வெள்ளமே நீடுழிவாழி" என்று வாழ்த்தி ஏத்துகின்றார்.

'இறைவனை வாழ்த்துவதா?' என்றொரு கேள்வி எழும். பல்லாண்டு என்று வாழ்த்திய அடியவர் பலர். தம்மை மறந்த நிலையில் நிற்கும் அடியவருக்கு வாழ்த்து வாயினின் றொலிக்கும் இறைவனை வாழ்த்த உயிர் வாழும், உலகு வாழும். அதனால் அடியவர் இறைவனை வாழ்த்துவர்.

பொறாமை கொண்டோரே அல்லல் கொண்டோர்.

வாழ்த்தும் போது இறைவனின் பெருமை மனத்தினுள் நிறைகிறது. அவன் எங்கும் பரந்தவன், இன்ப மயமானவன், கருணை மழை, கருணை வெள்ளம், அந்தத் தன்மைகளையெல் லாம் கூறிக்கூறி அவர் வாழ்த்துகிறார்.

உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பி யூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஓருறவும் உன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்கு தித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரம்பியார்த் தார்த்தெ ழுந்து
மடலவிழு மலர்னைய கைவிரித் துக்கூப்பி
வானேயங் வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடுழி
வாழியென வாழ்த்தி யேத்துங்
கடல்மடை திறந்தனைய அன்பரன் புக்கெளியை
கன்னெஞ் சனுக்கெ ளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நர்த்தமிடு
கருணா கரக்க டவுளே

எனத் தாயுமானவர் பாடியுள்ளார்.

இப்பாடல் அவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பாடப்பட்டதாயே இருக்கவேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் நீங்கள் உங்கள் மன அமைதியை இழந்துவிடக் கூடாது. மனம் அமைதியாக இல்லாவிட்டால் நீங்கள் இறைவனைச் சரியாக நினைக்கவும், தியானம் செய்யவும் முடியாது.

சுயநலம் அற்ற பணிபுரிவதன் மூலம் மனம் தூய்மை அடைகிறது.

தூய்மையான உள்ளத்தில் ஆத்மஞானம் தானாகவே தோன்றுகின்றது.

ஒருவன் இறைவனது நினைவில் மூழ்கிப்போனால் அது அவனுடைய குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும், அண்டை அயலார்களுக்கும் நன்மையைத் தருகிறது. அதோடு அவனுக்கும்தான் அது நன்மையைத் தருகிறது.

*-சுவாமி பிரேமேஷானந்தர்-*

**கொடுப்பதைவிட கொடுக்கும் முறை முக்கியமானது.**

தொடர்ச்சி...

உ

## 01-08-2004இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| தில்லைநாயகம் ஜான்சிராணி | ஏழாலை மேற்கு | 1000. 00 |
| V. ஞானேஸ்வரன் | ஏழாலை மேற்கு | 1000. 00 |
| தனுரா லோகநாதன் | வவுனியா | 2000. 00 |
| ஜெயவித்தியா ஜெயச்சந்திரன் | வவுனியா | 5000. 00 |
| பஞ்சலிங்கன் வரதன் | உரும்பிராய் | 1000. 00 |
| ந. நரேந்திரநாதன் | ஆவரங்கால் (ஜேர்மனி) | 5000. 00 |
| ஶ்ரீ நதியா நகைமாடம் ஸ்ரான்லிவீதி | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| தனபாலசிங்கம் குமாரதாசன் | இணுவில் | 1மூடை அரிசி |
| க. குணசீலன் | பிரான்ஸ் | 501. 00 |
| ம. மகேந்திரன் | ஊரெழு | 2000. 00 |
| பாலச்சந்திரன் செந்தூரன் | கனடா | 8000. 00 |
| அஞ்சனா ரவீந்திரராசா | கொழும்பு | 10,000. 00 |
| S. மிகிந்தலா கட்டைவேலி | கரவெட்டி | 2100. 00 |
| க. செல்வராசா | கரவெட்டி | 1000. 00 |
| சி. குமாரசாமி இளை. ஆசிரியர் | பத்தமேனி | 1000. 00 |
| ஜெ. சற்குணதேவி | ஊரெழு கிழக்கு | 1000. 00 |
| T. சுந்தரமூர்த்தி யாமாவளவு காசிப்பிள்ளை கோவிலடி,தெல்லிப்பழை | | 2000. 00 |
| சி. ஜெயரட்ணம் | கொழும்பு | 2000. 00 |
| செல்வி ச. ஶ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. அருள்நந்தி அருளகம் | துன்னாலை மத்தி | 2000. 00 |
| த. ஜெயராஜா விவேகானந்தா அவனியூ | கொழும்பு | 5000. 00 |
| திரு திருமதி பிரபா (லண்டன்) | கரவெட்டி | 3000. 00 |
| S. குகப்பிரசாதன் | வல்வெட்டித்துறை | 1மூடை அரிசி தேங்காய் |
| நகுலேந்திரன் ஜெயவாணி குடும்பம் | கரவெட்டி | 2000. 00 |
| சுகுனாநந்தம் சுகன்யா | கனடா | 4000. 00 |
| ஆ. சுந்தரலிங்கம் குடும்பம் அஞ்சல் | திணைக்களம் யாழ்ப்பாணம் | 2000. 00 |
| கதிரவேல் குடும்பம் சந்நிதி வீதி | அச்சுவேலி | 2000. 00 |
| சி. மகாலிங்கம் இராசவீதி | நீர்வேலி மேற்கு | 2மூடை அரிசி |
| இ. விஜயரத்தினம் | பத்தமேனி | 1மூடை அரிசி |
| செல்வி T. பெரியதம்பி | பருத்தித்துறை | 1000. 00 |
| A.V. முருகையா | அவுஸ்திரேலியா | 15,680. 00 |
| இ. கார்த்திகேயன் குடும்பத்தினர் | பத்தமேனி | 10,000. 00 |
| செல்லப்பா அருந்தவராசா (கனடா) | அச்சுவேலி வடக்கு | 10,000. 00 |

எதை நாம் அறியவில்லையோ அது நம்முடையதல்ல.


| | | |
|---|---|---|
| க. விவேகா | ஓமான் | 1000. 00 |
| Dr.S. சண்முகநாதன் | மொறட்டுவ | 10,020. 00 |
| M. திலகநாதன் | சுவிஸ் | 5000. 00 |
| இரட்ணசிங்கம் | மாவிட்டபுரம் | 2000. 00 |
| க. பூபதி | கரவெட்டி மேற்கு | 1000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி கதிரவேற்பிள்ளைவீதி | பருத்தித்துறை | 3000. 00 |
| சி. ஸ்ரீ ஆனந்தராஜா (அவுஸ்திரேலியா) | நவிண்டில் | 2000. 00 |
| தயாநிதி விஜயரட்ணம் | கிளிநொச்சி | 3000. 00 |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| R. முத்துலிங்கம் செட்டியார் இராமையாசெட்டியார்வீதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| செ. நவரத்தினராசா (கப்பூது) | குப்பிளான் | 10,000. 00 |
| மு. இராசேந்திரம் கோல்வை வளவு | தும்பளை | 2000. 00 |
| த. விக்னேஸ்வரன் | தும்பளை | 2000. 00 |
| சோ. பரமநாதன் G.S மூலம் கமலதாசன் | லண்டன் | 25,000. 00 |
| த. கருணாகரன் கோகுலவீதி, | கோண்டாவில் | 2000. 00 |
| ஆகாஷ் ஆகீசன் (பலாலி) | லண்டன் | 5000. 00 |
| ஜஸ்விக்கா அஞ்சனா (பலாலி) | டென்மார்க் | 5000. 00 |
| S. உதயகுமார் இரும்புமதவடி | வதிரி | 2000. 00 |
| சி. கிருபாகரன் சிவசக்திகோவிலடி | அச்சுவேலி | 4000. 00 |
| K. சந்திரபாலா மூத்தவிநாயகர்கோவிலடி | கரவெட்டி | 4000. 00 |
| சங்கரப்பிள்ளை சண்முகம் | மட்டுவில் | 3000. 00 |
| செ. சுப்பிரமணியம் | கொழும்பு | 1000. 00 |
| N. பாலகிருஷ்ணன் | உடுப்பிட்டி (கொழும்பு) | 2000. 00 |
| ந. மயூரன் | கொழும்பு | 500. 00 |
| சிவன் குடும்பம் | நாகர்கோவில் | 5000. 00 |
| கனகசபாநாதன் | ஆவரங்கால் | 3000. 00 |
| க. மாதவன் மீரா | சங்கத்தானை | 2000. 00 |
| செல்வகுமாரன் கீதா தம்பதிகள் | பருத்தித்துறை | 5000. 00 |
| ஜெ. ஜலோயன், ஜெ. ஜசுமிகா | இடைக்காடு (சுவிஸ்) | 3000. 00 |
| J.K. மிதுன் | U.K | 3000. 00 |
| நடேசன் வரதீசன் (லண்டன்) | கொழும்பு | 5000. 00 |
| P. பரிமளாதேவி மூலம் (கொழும்பு) | இரத்தினசிங்கம் | 5000. 00 |
| இரஞ்சினிதேவி | ஜேர்மனி | 23,500. 00 |
| ப. பாலேந்திரன் குடும்பம் | | 5500. 00 |
| Dr.K. மகேஸ்வரன் | (கொழும்பு) | 1501. 00 |
| கௌரியானந்தன் | கோப்பாய் | 1000. 00 |

(தொடரும்...

**நேர்மையானவர்களிடம் அதிகம் பண்பு இருக்கும்.**

# சந்நிதியான்

- ந.அரியரத்தினம் -



திரு தி. தவபாக்கியராசா அவர்களின் சொந்தஇடம் திக்கம். அச்சுவேலியில் மணம்முடித்து அச்சுவேலி வடக்கு அச்சுவேலி என்ற விலாசத்தில் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்றார். நீர்வேலி பிரதேசசபையில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற திரு தி. தவபாக்கியராசா சந்நிதியில் இடம் பெறும் அன்னதானத்தின் முக்கியத்துவத்தையும் அதன் பயன்பாட்டையும் நன்கு விளங்கிக்கொண்டதனால் கடந்த ஒன்றரை வருடங்களாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் நித்திய அன்னதானப்பணிக்கு மாதாமாதம் இரண்டு மூடை அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு அரிசி மூடைகளையும் யாழ்ப்பாணத்தில் வேணி களஞ்சியம் என்ற வியாபார ஸ்தாபனத்

தின் மூலம் ஆச்சிரமத்திற்கு கிடைக்கச் செய்து அதற்குரிய பணத்தை அவர் அந்த வியாபார ஸ்தாபனத்திற்கு வழங்கும் நடைமுறையைக் கடைப்பிடித்து வருகின்றார்.

சில மாதங்களுக்கு முன்பு குறிப்பிட்ட வேணி களஞ்சியம் என்ற வியாபார ஸ்தாபனத்திற்கு ஆச்சிரமத்தின் சுவாமிகள் சென்றிருந்தார்கள். அங்கே இருந்த வியாபார உரிமையாளர் திரு கு. கங்கைவேணியன் அவர்களிடம் எமக்கு சம்பா அரிசி தேவைப்படுவதால் திரு தி. தவபாக்கியராசா வழங்குகின்ற அந்த இரண்டு மூடை நாட்டரிசிக்குப் பதிலாக சம்பா அரிசியை வழங்குமாறும் அதற்குரிய பற்றுச்சீட்டை வழமைபோல திரு தவபாக்கியராசாவிடம் வழங்கிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்கள். வியாபார உரிமையாளர் திரு கு. கங்கைவேணியன் நாட்டரிசிக்குப் பதிலாக சம்பா அரிசியை ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் கையளித்தார்கள்.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளர் வழமைபோல திரு தவபாக்கியராசாவிடம் தான் வழங்கிய இரண்டு மூடை சம்பா அரிசிக்குரிய பற்றுச்சீட்டை வழங்கி ஆச்சிரமத்தின் சுவாமிகள் சம்பா அரிசியை வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அதனை வழங்கியது பற்றியும் எடுத்துக்கூறினார்கள். திரு தவபாக்கியராசா அவர்களும் ஆச்சிரமத்தின் சுவாமிகளும், வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளரும் எதிர்பார்த்தது போல எந்தவித மனக்கிலேசமுமின்றி சம்பா அரிசிக்குரிய பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய கொடுப்பனவுகளையும் வழங்கினார்கள்.

இந்தச்சம்பவம் இடம்பெற்று சில நாட்களின் பின் திரு தவபாக்கியராசா அவர்கள் தனது வீட்டில் இயல்பாக தனது கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவரது மனைவி குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டில் குத்தரிசிக்குப் பதிலாக சம்பா அரிசி வழங்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்கள். அவர் தனது கணவனை நோக்கி "இஞ்சபாருங்கோப்பா நாங்கள் ஆச்சிரமத்திற்கு நாட்டரிசியைத்தானே வாங்கச் சொல்லியிருந்த நாங்கள் இங்கே சம்பா அரிசிக்கல்லே பில் போட்டிருக்கிறார்கள்" என்று தனது கணவனிடம் முறையிட்டார்கள்.

அதற்கு திரு தவபாக்கியராசா அவர்கள் "ஆச்சிரமத்தில் சம்பா அரிசி தேவைப்பட்டிருக்கு போலுள்ளது அதனாலை மோகன் சுவாமி சம்பா அரிசியை வாங்கியுள்ளார்" என்று இயல்பாக பதில் கூறிவிட்டு தனது வழமையான வீட்டு வேலைகளில் மூழ்கிப் போய்விட்டார்கள். ஆனாலும் திரு தவபாக்கியராசாவின் மனைவி இதில் பூரணதிருப்தி அடையவில்லை. விலை கூடிய சம்பா அரிசியை வாங்கியிருக்கிறார்களே இது எங்களுக்கு எவ்வளவு மேலதிக செலவை ஏற்படுத்துகின்ற ஒரு விடயம் என அவருடைய மனதிற்குள் ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிகழ்வு இடம்பெற்று அடுத்த நாள் திரு தவபாக்கியராசா

அவர்கள் சந்நிதி ஆலயத்திற்கு வந்து சந்நிதியானை மனம்குளிர வணங்கிய பின் ஆச்சிரமத்திற்கும் சென்றார்கள். அப்பொழுது நேரம் பி.பகல் 2.30 மணியைத்தாண்டி விட்டநிலையிலும் அன்னதானத்தை பரிமாறுகின்ற கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அந்த இளம் தொண்டர்கள் தமக்கே உரித்தான தனித்துவமான பாணியில் சுறுசுறுப்பாக அன்னதானத்தை பரிமாறிக் கொண்டிருந்தார்கள். ஆச்சிரமத்தின் சுவாமிகளும் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கிற அடியார்களுக்கு அன்னதானத்தை வழங்குவதற்குரிய ஒழுங்குகளை வழிப்படுத்திக்கொண்டிருந்தார்கள். பல அடியார்கள் பந்தியில் இருந்து திருப்தியான முறையில் அன்னதானத்தில் பங்கு கொண்டு தமது பசியைப் போக்கிக்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் திரு தவ பாக்கியராசா அவர்களை இனம் கண்ட ஆச்சிரமத்தின் சுவாமிகள் ஏனைய அடியார்களில் ஒருவராக திரு தவபாக்கியராசாவையும் பந்தியில் இருத்தி அவருக்கும் உணவு பரிமாறுவதற்கு ஒழுங்குகள் செய்தார்கள். திரு தவ பாக்கியராசா அவர்களும் அன்னதானத்தில் பங்கு கொண்டு திருப்தியான முறையில் தனது பசியைப் போக்கிக் கொண்டார்கள்.

பொதுவாக சந்நிதியானைத் தரிசிக்கச் செல்பவர்களுக்கு சந்நிதியானை உரிமையுடனும் நெருக்கமாகவும் வழிபடுவதால் ஏற்படும் திருப்தி, அத்துடன் சந்நிதிச்சூழலில் வழங்கப்படும் அன்னதானத்தில் பங்குகொண்டு அதனால் ஏற்படும் திருப்தி என இரண்டு வகையான திருப்தியுடன் வீடு திரும்புகின்ற அனுபவம் ஏற்படுவதுண்டு. ஆனால் அன்றையதினம் திரு தவ பாக்கியராசாவுக்கு இவற்றைவிட இன்னொரு திருப்தியும் மனதில் ஏற்பட்டது.

ஆம் திரு தவபாக்கியராசாவுக்கு அன்று ஏற்பட்ட மேலதிகமான அந்த மூன்றாவது மனநிறைவு தொடர்ந்து அவரது உள்ளத்தில் ஏற்படுத்திக்கொண்டிருந்த உந்தலினால் ஓரளவு விரைவாகவே தனது வீட்டினைச் சென்றடைந்தார்கள். அவ்வாறு சென்றடைந்த திரு தவபாக்கியராசா தனது மனைவியை நோக்கி நிதானமாகப் பின்வருமாறு கூறினார்கள். “நீ நேற்று ஆச்சிரமத்தினர் கடையில் சம்பா அரிசியை ஏன் வாங்க வேண்டும் என்று கேள்வி கேட்டாய் இன்று ஆச்சிரமத்தில் அவர்களால் வாங்கப்பட்ட அதே சம்பா அரிசிதான் எனக்கும் என்னுடன் இருந்த அடியார்களுக்கும் பரிமாறப்பட்டது. பார்த்தாயா சந்நிதியானுக்கு என்று நினைத்து சந்நிதியான் ஆச்சிரமத்தின் நித்திய அன்னதானப்பணிக்கென்று நாங்கள் வழங்கிய அரிசி சரியானவர்களுக்கு சரியான நேரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற நிதர்சனமான உண்மையை” என உள்ளத்தில் உவகை பொங்க எடுத்துக் கூறினார்கள்.

இந்த உண்மையை நான் எப்பொழுதோ முழுமையாக உணர்ந்திருந்தாலும் உனக்கு உணரவைப்பதற்காக நீ நேற்று எழுப்பிய சந்தேகத்திற்கு இன்று சந்நிதியான் ஆணித்தரமான பதிலை ஆதாரத்துடன் அரங்கேற்றிய அற்புதமான செயல் அல்லவா இது எனக் கூறிய தவபாக்கிராசா அவர்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள் அவரது

செல்வங்களைவிட செல்வாக்கு மேலானது.

மனைவியும் சந்நிதியானுடைய அற்புதத்தை வியந்து அவனது நாமங்களை உச்சரிக்க ஆரம்பித்தார்கள்.

ஆம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அரிசி மிகத் தாராளமாக இருக்கின்ற பொழுதிலும் எதிர்பார்த்த அளவைவிட அதிகளவு அடியார்கள் நேரம் பிந்திய நேரத்தில் மிகுந்த பசிக்கொடுமையுடன் வருகின்ற பொழுது புதிதாக அரிசியை உலையில் இட்டு மிகவிரைவாக அடியார்களது பசிப்பிணியைப் போக்குவதற்கு பயன்படுத்தும் தூயநோக்கத்திற்காகவே சம்பா அரிசி பயன்படுத்தப்படுகிறது என்ற உண்மையை பலர் ஏற்கனவே உணர்ந்திருந்தாலும் திரு தி. தவபாக்கிய ராசாவின் மனைவியும் மற்றவர்களும் நன்கு விளங்கிக் கொள்வதற்கான ஒரு நிகழ்வாகவே இதனை நாம் நோக்க வேண்டும்.

சந்நிதியிலும் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் நடைபெறுகின்ற அன்னதானம் என்பது மனிதர்களால் நடாத்தப்படுவது அல்ல அது சந்நிதியானால் தான் நடாத்தப்படுகின்ற ஒரு கைங்கரியம் என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்ந்து செயற்படுவோமாக.

ஓம்! முருகா

## *கடவுளைத்தேடி....*

வருகிற துன்பத்தை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள். எதையும் தாங்கிக் கொள்ளும் இயல்புதான் ஆன்மிக சாதனைக்கு அஸ்திவாரமாகும். சிறியதோ, பெரியதோ எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஒன்றுதான். அதுதான் எதையும் தாங்கிக்கொள்ளும் தன்மை.

நாம் சிறந்த தர்மங்களைக் கடைப்பிடிப்பதற்கு இந்த நமது உடல்தான் முக்கிய கருவியாக விளங்குகிறது. நாம் நமது உடல் ஆரோக்கியத்தை மிகவும் நல்லமுறையில் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். நாம் தொடர்ந்து நோய்வாய்ப் பட்டிருந்தால் நமது மனம் அசுத்தமடைகிறது. மந்திர உபதேசம் பெறுவதால் மனம் பெருமளவு தூய்மையடைகிறது. மந்திர உபதேசத்தைப்பற்றி சரியாக ஒருவன் அறிந்துகொள்ளாமற் போனால், அதனுடைய முழுப்பயனையும் அவன் பெறுவதில்லை.

பலவகையான ஆன்மிக அறிவுரைகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகச் சொல்வார்கள். அவை எல்லாவற்றிலும் சிறிதளவு உண்மை உண்டு. ஆனால் ஒருவனுடைய மனதிற்கு எது பிடிக்கிறதோ அதையே அவன் செயல்ப்படுத்தவேண்டும்.

புத்தகங்கள் பலவற்றையும் கண்டபடி படித்துக்கொண்டிருப்பதால் பலன் எதுவும் இல்லை. சிந்தனை ஒட்டம் முறையாக இல்லாவிட்டால் மனம் அமைதியடையாது.

கண்கள் உன் வசப்படுமா? உன் கட்டுப்பாட்டில் உன் கண்கள் இருப்பது உனக்குச் சாத்தியமானால் மற்ற எல்லாமே உனக்குச் சாத்தியம் தான்.

*-சுவாமி பிரேமேஷானந்தர்-*

**புனிதமான செயல்களால் வருவதே புகழ்.**

உ

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

07-10-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

திருக்கேதீச்சரம் சபாரத்தினம் சுவாமிகள் பற்றிய "பக்திப்பாமாலை" நூல் அறிமுகவிழா.

நூல் அறிமுகம்:- செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்

சுவாமிகளை நினைவு கூர்தல்:- சித்தாந்த பண்டிதர் வ. ஆ. தங்கமயில்

---

14-10-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## மாணவர்கள் பஜனை நிகழ்வு

வடமராட்ச்சி மத்திய மகளிர் கல்லூரி

திரு இருதயக்கல்லூரி கரவெட்டி

---

21-10-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)**

வழங்குபவர்:- அ. குமாரவேல் [சிரேஷ்ட விரிவுரையாளர்]

[யாழ்/கல்லூரி வட்டுக்கோட்டை]

---

28-10-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## ஐப்பசி- 2005

வெளியீட்டுரை :- இரா ஸ்ரீநடராசா ஆசிரியர்

[தொண்டைமானாறு வீ. ம. வி]

மதிப்பீட்டுரை :- குமாரசாமி சண்முகநாதன்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

[அபிவிருத்திப்பகுதி வலிகாமம் வலயம்]

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

ஜனவரி
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

பெப்ரவரி
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

மார்ச்
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

ஏப்ரல்
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

மே
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

ஜூன்
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

ஜூலை
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

ஆகஸ்ட்
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

செப்ரெம்பர்
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

ஒக்ரோபர்
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

நவம்பர்
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

டிசம்பர்
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005